

அமரர்

# சண்முகநாதன் பாஸ்கரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# 31ஆம் நாள் நினைவு மலர்

2017.11.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



எண்.887, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

*அமரர்*

# சண்முகநாதன் பாஸ்கரன்

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

## 31ஆம் நாள் நினைவுச் சுடர்

## 2017.11.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எம் இனிய தெய்வத்திற்கு
# சமர்ப்பணம்

ஊருறவு போற்றும்
உத்தமனாய் உயர்ந்து
பேரறிய உழவுத் தொழில்
தோளில் சுமந்துயர்ந்து
சீரும் திருவருளும்
சிறக்க வாழ்ந்த மகன்
பேரறிய திருவடிக்கு இம்
மலரினை சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்



மலர்வு
1963.09.25

உதிர்வு
2017.10.05

## அமரர்

# சண்முகநாதன் பாஸ்கரன்

ஆண்டு ஏவிளம்பி புரட்டாதித் திங்களிலே
பூண்ட அபர பக்கப் பூரனையில் நீண்ட புகழ்
பாஸ்கரனார் வைகுண்டம் ஏகி
பரந்தாமன் தான் சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்ச தோத்திரம்

## தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே
காணப் பேரூராய்
கேட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே
கொழுநற் சொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
பனங்காட்டூ ரானே
மாட்டூர் அறவா மறவாதுன்னைப்
பாடப் பணியாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செய்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே இம்மையே
உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்கரணு
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வணந்தருளிப்
பொன்னெடும் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலிய
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமணவாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்

ஆதியாய் நடுவுமாகி
அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகித்
தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியாய் ஏகம் ஆகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லை
பொது நடம் போற்றி போற்றி

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணியே கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்கை குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கலோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகநாதன் பாஸ்கரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

" தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இயற்கை வளம் பல நிறைந்த இலங்கை ஈழமணித் திருநாட்டில் வடபுலத்தின் வன்னிப் பெரு நிலப்பரப்பில் கிளிநொச்சி மாநகரில் கழனிகளும், நீர்நிலைகளும், ஆலயங்களும் நிறையப் பெற்ற வட்டக்கச்சி எனும் அழகிய கிராமம் தனில்.

1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ஆம் திகதி சண்முகநாதன் அன்னலட்சுமி தம்பதிகளுக்கு நான்காவது மகனாகப் பிறந்தவரே பாஸ்கரன் ஆவார். இவர் சிறு வயதிலேயே துடிதுடிப்பும் கெட்டித்தனமும் கொண்டவராக விளங்கினார். இவர் தனது ஆரம்பபாலர் கல்வியினை நடராசா அன்னலட்சுமி பிள்ளைமாமி என்பவரிடமும் அதன் பின்னர் கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஆறு வரையான கல்வியினைக் கற்றார். அதன் பின் கிளி/ மத்திய மகா வித்தியாலயத்திலும் தன் கல்வியினை தொடர்ந்தார். (கல்விப் பொதுதராதர பத்திரம் வரை)

இவர் தனது பாடசாலையில் கல்வி கற்கும் கால கட்டங்களிலேயே இணைபாட விதானம் மற்றும் பல்வேறு விளையாட்டுக்களிலும் பங்கு பற்றி அவற்றில் முதன்மை நிலையில் திகழ்ந்தார். குறிப்பாக உதைபந்தாட்டம், மரதன் ஓட்டம் (வீதி ஓட்டம்) என்பவற்றில் முன்னிலையில் திகழ்ந்தார். கல்வி கற்பதோடு நின்று விடாமல் விவசாயம், கால்நடை வளர்த்தல் போன்ற இதர செயற்பாடுகளிலும் ஆர்வம் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980ஆம் ஆண்டளவில் தன் படிப்பை இடைநிறுத்திக் கொண்டு விவசாயத்தையே முழுநேரச் செயற்பாடாகக் கொண்டு செயற்பட்ட இவர் மாடுகள் வளர்த்து அவற்றினாலேயே வயலை உழுது நெல்லைப் பயிரிட்டு நெற்ப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தார். அத்துடன் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபாடு மிக்கவராக திகழ்ந்தார். இவ்வாறு ஆரம்பித்த பயிர்ச்செய்கை காலப்போக்கில் நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கையை மெருகூட்டினார். இவ்வாறு இருக்கும் போது

1983ஆம் ஆண்டு வெளிநாடு செல்லும் நோக்குடன் கொழும்பு சென்று அங்கே இராணுவத்தின் பிடியில் சிக்குண்டு திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டு பின் மீண்டும் தன் கிராமத்திற்கு திரும்பி வந்தார். பின்னர் 1985ஆம் ஆண்டு பாலசிங்கம் இரத்தினம் தம்பதிகளின் இரண்டாவது மகளான இரத்தினகலாவை கைத்தலம் பற்றி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். அதன் படி 1986ம் ஆண்டு மூத்த மகனாக துஷ்யந்தன் என்பவரை பெற்றெடுத்தனர். இதனால் இரு குடும்பத்தினரும் முதல் பேரப்பிள்ளை கிடைத்தது கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

அதன் பின்னர் 1986ஆம் ஆண்டு இறுதியில் குடும்பமாக லண்டன் செல்வதற்காக இந்தியா சென்று மும்பை நகரில் பத்து நாட்கள் வரை பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி பின்னர் மீண்டும் இலங்கையை வந்தடைந்தார். உடன் பிறந்தவர்களுடனும், மைத்துனிமாருடனும் சந்தோசமாக வாழ விரும்பிய இவர் இங்கு வந்தாலும் வாழ்ந்தாலும் எல்லோரும் வெளிநாடு சென்று விடவே இவர் வாழ்க்கை இரு புறமும் தனித்து விடப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது மாகனாக நிஷ்யந்தனும் மூன்றாவது மகனாக தினேஷனும், நான்காவது பிள்ளையாக கிரிஷாந்தனும் நன் மக்களாக பிறந்தனர். பிள்ளைகள் மீது அன்பும், அக்கறையும் கொண்டு விளங்கினார் இவ்வாறு இருக்கும் காலத்தில் 1991இல் அன்பும், பாசமும் நிறைந்த மாமியாரை இழந்து கவலை கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் கால ஓட்டத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் இடம் பெயர்ந்து பல்வேறு துன்பங்களையும் அனுபவித்தார். பின் மீண்டும் சொந்த கிராமத்தில் மீள்குடியேறி தன் வழமையான செயற்பாடுகளை முன்னெடுத்தார். இவ்வாறு விவசாயத்தில் சிறந்து விழங்கிய இவர் விவசாய மன்னன் எனும் பட்டத்தினையும் பெற்றார். இத்துடன் சமூகத்தின் பல செயற்பாடுகளில் முன் நின்று செயற்பட்டார். அந்த வகையில் இராமநாதபுரம் கமநல அபிவிருத்திக் குழுவின் தலைவராக பணியாற்றியவர். மேலும் கரைச்சிக் கிழக்கு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராகவும், உப தலைவராகவும் கடைமையாற்றினார். இத்துடன் $D_3$ கமக்கார அமைப்பின் தலைவராகவும் இரணைமடு சம்மேளத்தின் உறுப்பினராகவும், மாயவனூர் மத்தி கிராம அபிவிருத்தி சங்கத்தினை ஆரம்பிப்பதில் முன்நின்று உழைத்து அதன் உப தலைவராகவும் விளங்கினார்.

இவற்றுடன் புழுதிஆறு குளத்தினை உருவாக்குவதில் அவரது பங்களிப்பு அளப்பெரியதாக விளங்கியது. மேலும் வட்டக்கச்சி கலைவாணி மாட்டு வண்டில் சவாரித்திடலை உருவாக்குவதில் இவரது முயற்சி பெரு வெற்றி பெற்றது. என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இரணைமடுக் குளத்தின் அபிவிருத்திக்கும், இரணைமடு குளத்தின் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்படையாத வகையில் அதன் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி புரிந்தவர்.

இவ்வாறு சமூகத்துடன் இணைந்து அதன் பொருளாதார மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்ட இவர் தன் பிள்ளைகளை திருமண பந்தத்தில் இணைத்து அவர்களில் மூவரை வெளிநாடு அனுப்பி விட்டு பிள்ளைகளின் பிரிவைத் தாங்காது வேதனை கொண்டவர். அவ் வகையில் துஷ்யந்தனுக்கு நிலானியையும் நிஷ்யந்தனுக்கு கௌதினியையும், கிரிஷாந்தனுக்கு டிசாந்தினியையும் மணம் முடித்து மருமக்களாக பெற்று மகிழ்வடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேற்றம்

" காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பால்துளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக் கூட்டையே

*திருமந்திரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தன் பிள்ளைகளின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு நல்ல தந்தையாகவும். தன் மனைவிக்கு அன்பு நிறைந்த கணவனாகவும் பார் போற்ற இப் புவியுலகில் சமூகத்தவருடன் கூடி வாழ்ந்து நற்பண்புகளை கடைப்பிடித்து வாழ்வில் உயர்வு பெற்றிருக்கும் சமயத்தில் விதியின் கால ஓட்டத்தில் 05.10.2017இல் இறைவனின் திருப்பாதங்களை சென்றடைந்தார்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**
**சுபம்**

*இங்ஙனம்*
*குடும்பத்தினர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் ஆதங்கம்

என் அன்புத் தெய்வமே என்னைத் தவிக்க விட்டு
எங்கு தான் சென்றீரோ

அன்று முதல் இன்று வரை பிரியாதிருந்த எம்மை
இன்று நீண்ட தூரம் பிரிந்தது தான் என்ன
நான்கு ஆண் பிள்ளைகளையும் பெண்பிள்ளைகள் போல் கட்டுப்பாட்டுடன் வளர்த்த நீங்கள்
உங்கள் உடல் நலனை கவனிக்காது வாழ்ந்தது தான் பிழைத்ததுவோ

அத்திவாரம் பிழைத்தால் கட்டிடம் சரிவராது என்று அடிக்கடி கூறுவீர்களே உங்கள் வாழ்விலும் அத்திவாரம் பிழைத்ததுவோ ஆண்டவனே என்ன பாவம் செய்தேனப்பா ஒரு நொடி கூட உங்கள் பிரிவை தாங்க முடியாது தவிக்கின்றேன். அப்பா நீங்கள் ஏழு பேருடன் சேர்ந்து பிறந்த நீங்கள் கூறுவீர்கள் எட்டுப் பேரும் ஒன்று சேர வேண்டும் என்று எத்தனை நாளாய் ஆசைப்பட்டீர்கள் உங்கள் ஆசைகள் நீங்கள் சென்ற பின் தான் நிறைவேறியதே ஆண்டவனே

உங்கள் அன்புச் செல்வங்கள் மூவரையும் மருமகளையும் வெளி நாடு அனுப்பி விட்டு ஓடோடி வந்து உங்கள் பணிகளை சிறப்புடனே செய்தீர்கள் என் மக்கள் என்று எல்லோருடனும் அன்பாய் பழகினீர்கள் முதியோரைக் கண்டால் அவர்கள் மனம் கோணாமல் நடப்பீர்கள் அப்பா உலகில் உங்களை மட்டுமே எனக்கு பிடிக்கும் என்று அடிக்கடி சொல்வேனே என்னைப் பயித்தியமாய் ஆக்கி விட்டு எங்கே தான் போனீர்களோ!

பிள்ளைகளை அவர்கள் விருப்பத்திற்குத் திருமணம் செய்யட்டும் என்பீர்கள் மருமக்கள் எல்லாம் மகள் மார் என்பீர்கள். மதி, தீசன் என் மூத்த மகன்கள் என்று கூறுவீர்களே அப்பா உங்கள் மூத்த மகனின் பிள்ளைகளை பேரக்குட்டிகள் என்று கொஞ்சினீர்களே அவர்களின் கையினால் உணவூட்ட ஆவென்று ஆனந்தமாய் உண்பீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போதாதென்று பிரான்ஸ்சில் பேரக்குழந்தைகளை பார்க்க போக வேண்டும் என்று கூறி நாட்கள் எண்ணி இப்போ பிரான்ஸ்சிற்கா போய் விட்டீர்களா!

மதியை அழைத்து என்னை கடலிலே குளித்தபின் சிவன்கோவிலுக்குக் கூட்டிச் செல்ல வேண்டுமென்று கூறினீர்கள் அப்படியே சென்று விட்டு சிவனிடம் வரம் வாங்கி எங்கே தான் போனீர்களோ! எப்பிறப்பில் காண்பேன் அப்பா உங்கள் திருமுகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகன் துஷ்யந்தன்

அப்பா உங்கள் நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும்
தெளிந்த பேச்சும் ஆளுமை கொண்ட செயல்களும்
எல்லாமும் எம் அப்பாவை எமக்கு சிறந்த
கதாநாயகனாகவே காட்டியது

சிறுவயதிலேயே எமக்கு அப்பா எல்லாவற்றையும்
கற்றுத் தந்தார். எவராயினும் பேசினாலும்
எம் அப்பாவைப் புகழ்ந்து பேசுவதையே கேட்டிருப்போம்
தங்களின் மகன்கள் என்று கூறுவதில் எமக்கு
எல்லையில்லா பெருமையுடன் கூடிய பேரானந்தம் அப்பா

எம் அப்பா எமக்கு எவ்வளவோ செய்தார்
ஓய்வின்றி பம்பரமாய் சுழன்றே திரிவார்
நாம் அவரை அமரவைத்து அழகு பார்க்கும் காலம்தான்
நெருங்கி வர கடவுளே ஏன் இந்த அவசரமோ

# மருமகள் நிலாணியின் நினைவில்

சிட்டாய் பறந்து திரியும் எம் மாமாவே
வயல் வெளிகளில் வட்டமிடும் மிடுக்கான
தோற்றத்தினை இனி எங்கு காண்போம் தலைதடவி
மார்பணைத்து முத்தமிட்டு தோள் தட்டி தோள் கொடுக்கும்
தோழன் எங்கள் மாமாவே உங்கள் கள்ளமில்லா
புன்னகையை இனி எங்கு காண்போம்
உங்கள் பிரிவுதனை எம்மால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது மகன் நிஷயந்தன்(நிசான்) உள்ளத்தில்

எம் அன்பு மிக்க அப்பாவே உங்கள் வாழ்க்கைப் பயணத்தை தினமும் மீட்டுப் பார்ப்பேன் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையை எமக்குத் தினமும் சொல்லிச் சொல்லி எம்மை வளத்தீர்கள் அன்பு, பாசம், கருணையின் உறைவிடமாய் நீங்கள் திகழ்ந்தீர்கள் துடிக்கும் நீங்கள் இப்போ எம் துயர் துடைக்காது எங்கு சென்றிர்களோ அப்பா

நீங்கள் எங்கேயும் போகவில்லை எம்முடன் தான் இருக்கிறீர்கள் உங்களை பிரிந்து எம்மால் வாழவே முடியாதப்பா. அப்பா ஒரு முறை வந்து எம்முடன் கதைத்துப் போங்கள் அப்பா இறுதியில் கூட உங்களை பார்க்க முடியாத பாவியாகத் தனித்திருந்து தவிக்கின்றேன். எனது திருமணத்திற்கு நிட்சயம் வருவேன் என்றீர்களே அது நிறைவுபெற முன் அவசரத்தில் எங்கே தான் போனீர்களோ அப்பா

# மருமகள் கௌதினியின் நினைவிலிருந்து

அன்பான மாமாவே பிள்ளை என்றால் இன்னொரு தரம் கூப்பிடமாட்டாரா என்ற அளவிற்கு என்மேல் பாசமாய் இருந்தீர்கள் திருமண வீட்டிற்கு தான் வெளி நாடு வருவேன் என்று அடிக்கடி கூறுவீர்கள். மாமா நான் வெளிநாடு போகும் செய்தி கேட்டு எவ்வளவு சந்தோசப்பட்டீர்கள் நான் செல்வதற்கு ஆய்தமாகும் முன் நீங்கள் எங்கே தான் சென்றீர்களோ நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. உங்கள் பிரிவால் வேதனையைச் சுமந்து நிற்கும் அன்பு மகள் கௌதினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது மகன் தினேஷன் துயர்

அன்பான அப்பாவே என்னதான் இருந்தென்ன நீங்கள்
ஒருவரே இருக்கின்றீர்கள் என்ற பொருமையுடன்
இருந்த எம்மை பாவிகளாக்கி
விட்டு எங்கே தான் சென்றீர்களோ!
அப்பா நீங்க ஏலாது என்று கூறியவுடன்
நான் ஓடோடி வந்து உங்களை பார்க்க வந்து
ஒரு சில மணிநேரத்தில் நீங்கள் ஓடி மறைந்தது என்ன?
அப்பா பயணம் செல்லவா என்னை
ஆவலுடன் பார்க்க ஏங்கித் தவித்தீர்கள் நான்
உங்கள் பொன்முகத்தை கண்டதும் நீங்கள் மறைந்த தென்ன
மாயமோ கடவுளுக்கும் கண்ணில்லை!
கையைப் பிடித்து முத்தமிட்டு
என்னை இப்படியா பார்க்க வந்தாய் என்றீர்களே
அப்பா கடைசி நேரம் நடந்தவற்றை
எப்படி மறப்பேனப்பா

## கடைசி மகன் கிரிஷாந்தன் மனைவி டிஷாந்தினி

என் அன்பான அப்பாவே கடைக்குட்டி என்று என்னை கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தீர்களோ!
அசட்டுத்தனமாய் இருக்காதே என்று அடிக்கடி அறிவுரை கூறுவீர்கள்
பொறுப்பில்லாமல் வளரந்து விட்டாய் என்று கூறிய நீங்கள் இப்போ எல்லாப் பொறுப்பையும் என் தலையில் போட்டு விட்டு ஏன் அப்பா சென்றீர்கள்
சிறிது நேரம் தாமதித்தால் அடிக்கடி தொலைபேசி அழைப்பு எடுப்பீர்களே அப்பா
இனி எனக்கு யார் துணையப்பா
கடைசியிலும் ஆசையாய் என் மடியில் படுத்தீர்களே நினைக்கவே தலை வெடிக்குதப்பா
அன்பான மாமாவே மருமகள் அல்ல என்மகள் என்பீர்கள் பசமாய் பிள்ளை என்று பக்குவமாய் பார்த்தீர்கள் இடையிடையே வந்து எம்மோடு அன்பாய் பேசுவீர்கள் எம்மை எல்லாம் கலங்க வைத்து எங்குதான் சென்றீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா

என் இரத்தம் உறைந்தது உன் பிரிவால் என குடும்பம் தேம்பி அழுகிறது

என் அன்புத்தம்பி உன்னை எங்களால் எப்படி மறக்க முடியும் என் தம்பிகளில் நடுவராகப் பிறந்த நீ எங்கள் செல்லப் பிள்ளையாகவே திகழ்ந்தாய் நாங்கள் எல்லோரும் ஒன்றாய் இருந்து உணவு உண்டு மகிழ்ந்திட்ட அந்த நாட்கள் எப்படி எங்களால் மறக்க முடியும்

பார்க்கும் இடமெல்லாம் உன் பாச முகம் தான் தெரிகிறது. நான் கேட்கும் ஒலியெல்லாம் நீ அக்கா என அழைக்கும் குரலாகவே கேட்கிறது காலத்தின் கட்டாயத்தால் நாங்கள் எல்லோரும் வேறு வேறு நாடுகளில் வாழ நேர்த்தாலும் எல்லோரும் அன்பெனும் பாசக் கயிற்றில் பிணைக்கப்பட்டு ஒரே இடத்தில் ஒன்றாகவே இருப்பது போன்ற உணர்வோடு தானே வாழ்ந்தோம்.

எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் அடிக்கடி ஒருவருக் கொருவர் தொடர்பு கொண்டு எங்கள் குடும்பங்த்தில் நடக்கும் நல்லது கெட்டதுகளை பரிமாறிக் கொண்டிருந்தோம். சொந்த மண்ணில் நீ தனியொருவனாய் வாழ்ந்து சாதித்த சாதனைகளையும் பெருமைகளையும் அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். இவற்றையெல்லாம் எப்படி எங்களால் மறக்க முடியும்.

துயரத்திலும் ஒரு ஆறுதல் என் பாசத்தம்பி உன் மூன்று மகன்களும் அவர்தம் குடும்பங்களும் எங்களுக்கு பக்கத்து நாடுகளில் இருக்கிறார்கள் என்பதும் ஓரிரு மணித்துளிகளில் போய்ப் பார்த்து வரலாம். என்பதும் தான் அவர்கள் நலமுடன் வாழ நாங்கள் உறுதுணையாக இருப்போம் போர் முனையில் இருந்து உன் மகன்களையும் சிலரையும் அருகிலிருந்து காப்பாற்றினாய் வயோதிப காலத்தில் முள்ளிவாய்க்காலில் மரணப்பிடியில் சிக்கிய எங்கள் தாய், தந்தை இருவரையும் பாதுகாப்பாய் மீட்டெடுத்தான். அனைவரையும் பாதுகாப்பாய் சட்ட பூர்வ வழியில் வெளிநாடுகளில் சேர்ப்பித்தாய் இந்த கடமையும் தீரச் செயலும் வேறு யாரக்குத் தான் வரும் இதையெல்லாம் எங்களால் மறக்க முடியுமா?

என்றென்றும் உன் நினைவாய் வாழும்
உன் அக்கா கிருபாவும் குடும்பத்தினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் ஆதங்கம்

அப்பப்பா
உங்கள் அன்பு முகம் நேரில் கண்டதில்லை
உங்கள் ஆசை வார்த்தைகளை நேரில் கேட்டதில்லை
நீங்கள் கட்டி அனைத்து முத்தமிட்டு கொஞ்சிக்
கொஞ்சி விளையாடக் கொடுத்து வைக்கவில்லை



எங்கள் கனவுகள் வீணாக்கி எங்கு சென்றீர்கள்
இனி உங்கள் இன்முகத்தை – அப்பப்பா
உங்கள் புகைப்படமே எங்கள் சின்னக்கரங்களில்
எல்லாமே இருந்தும் எட்டாக் கனியாகினவே
என்றும் உங்கள் அரவணைப்பிற்காகக் காத்து
ஏங்கிக் காத்திருக்கும் உங்கள் பேரக்குட்டிகள்
கரிஷ், காவனி, ஆகாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி பிரபாவின் ஆதங்கம்

என் உயிர் ஆசையண்ணாவே!

பாசமுள்ள குடும்பத்தில் நாலாவதாய் பிறந்து மூத்தவன் போல் எல்லோருக்கும் வழிகாட்டியாய் திகழ்ந்தாயே.

சின்ன வயதில் என்னை பிரபு என்று அழைப்பீர்களே உங்களுக்கு கீழ் பிறந்த நால்வரையும் ஒரு தூசி கூடபட விடமாட்டீர்களே

சின்னவர்களோ பெரியவர்களோ யாராயினும் வாருங்கள் இருங்கள் என்று தானே அழைப்பீர்கள் அடுத்த வருடம் ஆசைப்பெரியப்பதவை பார்க்கப்போறோம் என்று சொன்ன என் பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்ல போகிறீர்கள்

எல்லாம் அவசரம் செய்து முடித்தீர்கள் கடசியில் எண்மெரில் ஒன்று விட்டு பிரிவதிலும் ஏன் இந்த அவசரம் பதினைந்து வருடங்கள் உங்களை பார்க்காமல் இப்படியா நான் உங்களை பார்காமல் இப்படியா நான் உங்களைப் பார்க்க வேண்டும். என் ஆசையண்ணா என்று யாரை நான் அழைப்பேன் அண்ணா

உன் பிரிவால் வாடும் தம்பி
பிரபு, யாழினி, பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தம்பி சுதாவின் நினைவிலிருந்து....

எங்கள் அன்பான பாசத்துக்குரிய ஆசையண்ணா நீங்கள் விட்டு பிரிந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுடன் மனமுடைந்து போய் விட்டோம் அண்ணா நீங்கள் எங்களை விட்டு பிரிந்ததை நம்ப முடியவில்லை நீங்கள் எங்களுடன் கதைப்பதாகவே உணர்கின்றோம்.

அண்ணா சிறுவயதில் உங்களுக்கு பின்னால் ஓடித்திரிந்ததை மறக்க முடியுமா? நீங்கள் சிறுவயதிலிருந்தே எங்கள் குடும்பத்திற்காகவும் எங்கள் கிராமத்துக்காகவும் ஓடி ஓடி உழைத்தீர்கள் அந்த ஓடிய கால்கள் எப்படி ஓய்ந்தது என்று தெரியவில்லை பாதி வயதில் எம்மை விட்டு சென்றாலும் பார் புகழும் வண்ணம் வாழ்ந்து எங்கள் குடும்பத்துக்கு புகழ் சேர்த்தீர்கள்.

நான் இருபத்தி மூன்று வருடம் கழித்து வட்டக்கச்சி வந்த போது அங்குள்ள மக்கள் உங்கள் நேர்மையையும், உழைப்பினையும், துணிச்சலையும் எங்களுக்குச் சொன்ன போது சந்தோசப்பட்டதோடு பெருமிதமும் அடைந்தோம். நான் வாழ்ந்தால் உங்களை மாதிரி வாழ வேண்டும். என்று எண்ணம் தோன்றியது நீங்கள் வாழும் நாட்களில் மிகவும் உயர்ந்த நல்ல மனிதனாக வாழ்ந்து காட்டினீர்கள். எல்லோருடைய துன்பத்திலும் சந்தோசத்திலும் முன்னிற்பீர்கள் நல்லவர்கள் நீண்ட நாள் வாழ்வதில்லை. என்பதை இந்த உலகுக்கு எடுத்துச் சொல்லி விட்டு எங்களை விட்டு பிரிந்து சென்று விட்டீர்கள்.

அண்ணா உங்கள் இழப்பு எங்கள்குடும்பத்துக்கு ஈடு செய்ய முடியாது. உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அழியாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
தம்பி சுதாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கை தயா மைத்துனர் சுதா
# மருமக்கள் சாருகா, சகான்
# நினைவழியா நினைவுகள்

இவ்வுலகில் என் தொப்பிள்கொடி உறவாக ஆசையாக ஆசை அண்ணண் என்ற உறவைத் தந்து உங்களின் அன்புத் தங்கையாக இந்த பூவுலகில் பெருமையுடன் உலாவந்தேன். உங்களின் அன்புக்குரிய மைத்துனனை தங்கைக்காக கரம் பிடிக்கச் சம்மதித்தீர்கள் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற சந்தோசத்தில் தாய் நாட்டிற்கு வந்து கூடிக் குலாவிச் செல்வோமே.

நீங்கள் நோய்வாய் பட்டு இருந்து குறுகிய காலத்தில் மனம் விட்டு பேசத்துடித்தேனே ஆறுதல் வார்த்தை கூறத்துடித்தேனே அதற்கிடையில் காலன் ஒரு நொடியில் உயிரைக் கவர்ந்து விட்டான் நெஞ்சு பொறுக்க முடியுதில்லை ஓயாது ஓடி ஓடி குடும்பத்திற்காகவும், உறவுகளிற்காகவும், ஊருக்காகவும் உழைத்தது இன்று ஓய்ந்து விட்டீர்களா! பாசத்தையும் கருணையையும் எங்கள் மீது படரவிட்டாய் மைத்துனரே மனம் நோகாது அன்பாக பேசி உபசரிப்பீர்களே ஆசை மருமக்களை அணைத்து பலகதைகள் கூறுவீர்களே ஆசை மாமா இருக்கிறார் என்றால் நின்மதியாக தாய்நாடு சென்று திரும்பிடலாம் என்று கூறுவார்கள். நீங்கள் எங்குதான் சென்றீர்கள் மீண்டும் ஓர்முறை வரமாட்டீர்களா என மனம் ஏங்குகின்றது மனமோ ஆறமுடியவில்லை மீளாத் துயரில் வாடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதரர்களின் புலம்பல்

எம் பாசத்தின் ஒளிவிளக்கே உத்தமனே அண்ணா
பேரிடியென எம் இதயத்தில் இடி இடித்தது. உம் செய்தி இப்படி சீக்கிரம் போவீர்கள் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை அண்ணா
அனைத்து விடயங்களிலும் முன் நிலையில் நின்றீர்கள் சாவிலும் அப்படியே ஆகிவிட்டது எங்கள் குடும்பத்துக்கு நல்ல அண்ணனாய் தலைவனாய் ஆசானாய் என்றென்றும் நின்று வழி காட்டி வந்தீர்களே. உங்களை நம்பித்தானே. நாங்கள் இன்றும் வாழ்கிறோம். எங்கள் அண்ணா இருக்கிறார் என்று இனி எங்கள் அண்ணாவிற்கு நாங்கள் எங்கே போவது!

எந்தத் தவம் செய்யினும் எங்கள் அண்ணா மீண்டும் வர மாட்டார் என்று எண்ணி நாம் கலங்குகின்றோம். எங்கள் அன்புச் சகோதரனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உடன் பிறவாச் சகோதரர்கள்
தர்சன் – தர்சி – சுகி
(குரு சித்தப்பா குடும்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியண்ணா குமரையா குயிந்தா
## புலம்பல்

அன்புத் தம்பியே நீ வட்டக்கச்சியில் இருக்கிறாய் என்று
உன்னோடு சேர்ந்து வாழலாம் என்று வந்த என்னை
வாழ வழி காட்டி விட்டு எங்கே தான் சென்றீரோ
உமது விவசாய முயற்சி கண்டு நானும் ஆவல் கொண்டேன்
என் செய்வது என்று ஏங்கித் தவிக்கிறேன்
உன் திருமுகம் காண

## சின்னண்ணன் உதயகுமார் சாந்தினி
## புலம்பல்

வருடத்தில் இருமுறை உனைக் காண
வரத்தவற மாட்டேன்
அவ்வாறே இப்போ வந்த போது உமது உடல் நலக் குறைகளைக்
கண்டு ஏங்கிப் போய் விட்டேன். உடனே வைத்தியசாலை
கொண்டு செல்ல எண்ணித் துடிக்க போது எங்கே தான் சென்றீரோ
இனி எப்போ காண்போம் உன் திருமுகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி எப்போ
# உங்கள் அன்பு முகம் காண்போம்

பாஸ்கரன் என்று பாசமாய் அழைத்திடுவோம்
நன்மை தீமை என்றவுடன்
முன்னின்று நடத்திடுவீர்
எனது பிள்ளைகள் என்று
தினமும் கூறிடுவீர்
நோய் வந்தபோதும் நாங்கள் துடியாய் துடித்தோமே
அடிக்கடி தொலைபேசி அழைப்பு எடுத்து வைத்தியசாலைக்கு
அழைத்துச் செல்வோம் கடைசியில் கூட எம்மோடு
இருக்க ஆசைப்பட்டு அங்கு வந்து இருந்தீர்கள்
உங்கள் துயர் கண்டு புழுவாய் துடித்தோம்
எப்போ காண்போம்
உங்கள் சிரித்த முகத்தை பாவிகளாய் தவிக்கின்றோம்.

அன்ரி (மங்கலம்), மதி, தீசன், பவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துணர் சுதா புலம்பல்

எனது ஆசைமைத்துணரே
அயல் வீட்டு நண்பர் ஆக நாம் திரிந்த காலம்
என் நெஞ்சம் மறக்கவில்லையே
ஆசைமைத்துனர் ஆனாய் ஆசையோடும்
அன்போடும் பேசுவாய் நான் கேட்பதும் சொல்வதும்
மறுப்பின்றி இன்முகத்துடன் தலை அசைப்பாய்
நான் ஊர் வருவது என்றால் சந்தோசத்தோடு
வேகமாய் செயற்படுவாய் ஊர் வந்ததும் உனது திறமையால்
தாக்கப்பட்ட எங்கள் வீடுகள்
காணிகள், வயல்களை எல்லாம் காட்ட
உனது மோட்டார் சைக்கில்
வேகமாய் சூழலும் இறுதியாக சொல்லி விட்டாய்
அடுத்த முறை வரும் பொழுது உன்னைப் போல்
இருப்பேன் என்று அனால் இம்முறை நான் வரும் பொழுது
நீ அங்கு இல்லை நீ எல்லாவற்றிலும் வேகம் அது தான்
நான் வரும் போது நீ வேகமாகி போய் விட்டாய்
நீ இல்லாத ஊர் எனக்கு இருட்டு மைத்துனரே
உனது ஆத்மா கண்ணன் அடிசேர
நட்பும் அன்பும் கொண்ட

மைத்துனர்
சுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலன்கள் மைத்துனிகள்

பாஸ்கரன் அண்ணா!

அன்பு, அறிவு, துணிவு, ஆதரவு கொடுப்பது, உபசரிப்பு ஆகியவற்றின் முழுவடிவம் நீங்கள் அல்லவா! அண்ணா எங்கே போனீர்கள்?

என்றோ ஒரு நாள் எல்லோரும் மீண்டும் ஒன்றாக சேர்ந்து சந்தோசமாக இருப்போம் என்றல்லவா நினைத்தோம்.

அண்ணாவாக வந்து அத்தானாயியும் பாஸ்கரன் அண்ணா என்று உரிமையோடு அல்லவா அழைப்போம். அப்பாவிற்கு அடுத்து அண்ணாவாக எங்களுடன் நீண்ட காலம் இருப்பீர்கள் என்று துணிவாக அல்லவா இருந்தோம். வெளிநாடு போய் எங்களை கூப்பிடுவேன் என்று சொன்னீர்களே.

2009 இல் நீங்கள் இந்தியா வந்த போது இந்தியாவிலேயே இருக்கும் படி கேட்க மாட்டோம் என்று இதற்காகத் தான் ஓடிப் போனீர்களோ?

எனி யாரை பாஸ்கரன் அண்ணா என்று அழைப்போம். எப்போ தொலைபேசியில் கதைத்தாலும் பிள்ளைகளுடன் இங்கு வாங்கோ என்று அன்போடு அழைப்பார்கள். இனிமேல் இப்படி அன்பாய் கேட்க யார் உள்ளார்கள்?

எங்களை கண்ணீரில் விட்டு எங்கே சென்றீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இப்படிக்கு

சகலன்கள், மைத்துனிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சான் பாஸ்கரன்

மானிட வாழ்வில் மரணம் என்பது யதார்த்தமாய் சொல்லாமற் கொள்ளாமல் எப்போதும் வரக் கூடியது. இறைவனின் விருப்பப்படி எவரையும் அணுகக் கூடியது என்பதற்கு எனது மச்சான் பாஸ்கரனிக் மரணமும் ஓர் உதாரணமாக அமைந்து விட்டது பாஸ்கரன் எப்போதும் மச்சான் என்று என்னை அன்புடன் அழைப்பான். அடிக்கடி சந்திக்க முடியாவிட்டாலும் காணும் போது மிகுந்த வாஞ்சனையுடன் கதைப்பான் கடந்த ஒரு சில மாதங்களாக அவன் நோய்க்கு ஆளாக்கியிருந்தான். படிப்படியாகத் தேறிவருகையில் மீண்டும் உடல் நலம் குன்றியது. யாழ்ப்பாணம் நொதேன் வைத்தியசாலையில் இருக்கும் போது நானும் மனைவியும் சென்று பார்த்து உரையாடி வந்தோம். நீண்ட நேரம் அன்று தான் அவனுடன் கதைக்க முடிந்தது விலையுயர்ந்த மருந்து ஏற்றிக் கொள்ளும் நிலையிலும் கட்டிலில் கிடந்த படி உற்சாகமாக உரையாடினான். இருதினங்களில் நான் தொலைபேசியில் கதைத்த போது துண்டு வெட்டி வீடு செல்வதாகக் கூறினான். எப்போதும் தனது நோயின் தாக்கம் பற்றிய பிறருக்குக் கூறாமல் சகித்துக் கொள்ளும் மனவுறுதி அவனுக்கிருந்தது. இன்னுஞ்சில நாட்களின் பின் தொலைபேசியினூடாக உரையாடுகையில் வட்டக்கச்சியிலிருந்து இரு தடவைகள் வைத்தியசாலைக்கு வந்து சென்றதாகக் கூறினார். அவனுடைய உடல் நிலை தேறி விடும் என்பதில் நானும் நம்பிக்கை கொண்டிருந்தேன். தேவைப்படின் கொழும்பு அல்லது தமிழ்நாடு சென்று மருத்துவம் பார்க்கவும் எண்ணியிருந்தோம். மரணிப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் ஏழாலையிலுள்ள உறவினர் வீட்டில் இருப்பதாத் தெரிவித்தான் மறுநாள் மாலை அங்கு சென்ற போது தான் வட்டக்கச்சி திருப்பி விட்டதாகவும் கொழும்பு சென்று மறுநாள் இந்தியா செல்லப்போவதாகவும் தொலைபேசியில் கூறினார். 3ஆம் திகதி மாலை ஐந்து மணியளவில் ஒன்றுகூடி உரையாடியவனுக்கு 5ஆம் திகதி அதிகாலை மரணம் சம்பவிக்குமென நான் கனவிலும் கூட நினைக்கவில்லை விதி வரைந்த பாதையில் அவனது வாழ்வின் முடிவு தீர்மாணிக்கப்பட்டுவிட்டது. இரண்டாவது அண்ணனும் அவனது மூன்றாவது மகனும் பிரான்சிலிருந்து வந்ததுடன் மகனைக் கொஞ்சி மகிழ்ந்த இனிய மகனும் நினைவுடன் பாஸ்கரனின் உயிர் பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லைப்பிட்டி சண்முகநாதன் குடும்பத்தில் தாளாண்மை மிக்க உழைப்பாளி அவன் எட்டுப்பிள்ளைகளில் ஏழு பேரும் வெளிநாட்டில் வசிக்க எவ்வளவு முயன்றும் வெளிநாடு செல்ல அவனால் முடியவில்லை இருந்தும் அனைவரிலும் மேலாக மனைவி கடைசிமகனும் மருமகளும் என கொடி கட்டிப் பறந்தவன் " விவசாய மன்னன் " என விருது பெற்றவன். மாரதனோட்டம் சவாரிகளில் முதலிடம் பெற்றவன். விடாமுயற்சியால் பல பேர்களை வைத்து விவசாயம் செய்து புகழ் பெற்றவன். தேசிய விடுதலைக்கு தன்னாலான பங்களிப்பினை நல்கியவன் ஆபத்தான நேரங்களில் அவனது இல்லம் அன்னசத்திரமாக விளங்கியது. அடி வாங்கினான் அனைத்தையும் சாம்பல் மேட்டிலிருந்து மீட்டெடுத்த பீனிக்ஸ் பறவை போல் தாங்கிக் கொண்டு மீண்டும் புத்துயிர் பெற்று உழைத்தான். சமூகத்தினது உயர்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். மம்மல்குள அபிவிருத்தியில் மற்றவர்களுடன் தோளோடு தோள் கொடுத்துப் பாடுபட்டான். கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் அதிகமானோர் அறிந்து கொள்ளக் கூடிய அளவில் தனது உழைப்பினாலும் பொதுப் பணியினாலும் தனது பெயரினை நிலைநிறுத்தினான்.

இன்று எனது அருமை மச்சானை இழந்து தவிக்கின்றேன். 54 வயதில் இறைவன் அவனை அழைத்துக் கொண்டான். அவனது இடத்தை நிரப்ப வேறு யாருள்ளனர்? வல்லவன் வகுத்ததே வாய்க்கால் மரணத்தை நோக்கி என்ற படி காரியம் முடிந்து விட்டது. சண்முகநாதன் குடும்பத்தில் மரணத்தை நோக்கி முதல் அடி எடுத்து வைத்த துயரும் தாங்க முடியாதது வட்டக்கச்சியில் பாஸ்கரன் மச்சான் இருக்கிறான். என்ற நம்பிக்கையும் துணிவும் எனக்கு உறுதுணையாயிருந்தது இன்று அதனை இழந்து கையறு நிலையில் நிற்கிறேன். அவனது இனிய ஆத்மா எல்லாம் வல்ல பரம் பொருளின் திருவடிகளில் சரன்புக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

" குடம்பை தனித்தொழியப் புள்பறந் தன்றே
உடம்போ டுயிரிடை நட்பு "

*கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு*

*அல்லைப்பிட்டி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாது சமூக சேவகன் பாஸ்கரன்

சண்முகநாதன் பாஸ்கரன் சிறந்த ஓர் சமூக சேவையாளன். இவரது இழப்பு மாயவனூரின் மைந்தனின் இழப்பு தன்னலம் பாராது சமூக வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்த ஓர் மனிதன் பொது அமைப்புக்கள் தெரிவில் மாயவனூரில் முன் மொழியப்படும் பெயர்களில் முதற் பெயராக அவரது பெயரே முன்மொழியப்படும் அது உடனடியாகவே வழி மொழியப்படும் எதிர்ப்புக்கள் இன்றி தெரிவு செய்யப்படுவார். அந்த அளவிற்கு அவர் சமூகத்தோடு தன்னை ஒன்றினைத்த மனிதர் உபசரிப்பிலும் அவர் சோடை போனவரல்ல அரச நிகழ்வாயினும் வேறு நிகழ்வாயினும் மனம் கோணாது அனைவருக்கும் உணவளித்து உபசரிக்கும் பண்பாளர் சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதில் சிறப்பாகச் செயற்படுவர் கிராமத்திற்குத் தேவையான வளங்களைத் தேடிச் சென்று பெற்று வருவதில் சிறப்பானவர் அவரது ஆசைகளில் முதன்மையானது குளங்கள் புனரமைப்பது அவரது பேச்சுக்களில் கட்டாயம் அதன் தாக்கம் எப்போதும் இருக்கும் அவர் இடப்பெயர்வுக் காலத்தில் எமது குடும்பத்தினை தன்னோடு பாதுகாத்து முகாம் வரை கூட்டி வந்து மீள்குடியேற்றம் வரை ஆதரித்தமையை எம்மால் மறக்க முடியாது அவர் ஆத்துமத்தினை இறைவன் இடைநடுவில் அழைத்துக்கொண்டாலும் அவரைத் தன்னோடு இறைவன் வைத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை நல்லவர்களை இறைவனும் விரும்புவார் என்பது அவரிலும் நிரூபணமாகின்றது. அவரது இழப்பினால் கலங்கி நிற்கும் இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றேன்.

நீ.ஜோண் ஜெகநாதன்
கிராம அலுவலர்
மாயவனூர்
வட்டக்கச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் நண்பன் சண்முகநாதன் பாஸ்கரனின் ஆத்மா சாந்தி வேண்டி

விழிகளை நிஜம் மறைத்தாலும்
நினைவில் எழுந்த நிழல் மறைவதில்லை
வழி சொல்லாமல் நீவீர் சென்று மறைந்தாலும்
நிழலாய் உன்முகம் நெஞ்சில் இருக்குமன்றோ
அதிராமல் இதழ் அசைவில் மொழி செய்யும்
திருவாய் மறைந்திடுமோ
அன்றேல் மதிஉணர நீர் உரைக்கும் வழிகாட்டல்
நினைவின்றும் ஓடி விடுமோ?
ஆறாத் துயருடன் அளிக்கின்றோம் அஞ்சலிக் கவிதையை
ஆத்மா நித்திய அமைதி பெற்றிடவே
நிமலன் அடியைத் தொழுகின்றோம்.

*இங்ஙனம்*
*ஆறாத் துயருடன்*
*செல்லப்பா - இரவீந்திரன் குடும்பத்தினர்*
*இல. 846, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கரன் பற்றிய பசுமையான நினைவுகள்

பசுமை பற்றி பொருண்மியம் பற்றி எண்ணுகின்ற போதெல்லாம் நீங்காத நினைவுகளாக வருபவர் சகோதரன் சண்முகநாதன் பாஸ்கரன் அவர்கள் மீள்குடியேற்றத்திற்கு முற்பட்ட காலத்தில் பலரின் பார்வைக்குட்பட்ட பிரதேசம் வட்டக்கச்சி இராமநாதபுரம் இயல்பாகவே பசுமைப் பொலிவோடு திகழ்ந்த இடத்தை பாஸ்கரன் அவர்கள் பல்வகை விவசாய சமூகப் பணி மூலம் பல்வேறுபட்ட மனிதர்களின் பார்வைக்கு உட்படுத்தி இருந்தார். இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் தலைவராகவும் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ சங்க இயக்குனராகவும் பல காலம் சேவையாற்றியவர் D-3 வட்டக்கச்சி விவசாய பிரதேசத்தின் குஞ்சுமிசா குளத்தின் புனரமைப்பில் பாரிய பங்காற்றி பலரின் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தியதோடு புழுதிஆற்றை மறித்து குளம் அமைத்ததிலும் அயராது பாடுபட்டு பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் பசுமைப் புரட்சியிலும் பங்காற்றியுள்ளார்.

மேலும் மீள்குடியேற்றத்தின் பின்பும் அவர் இராமநாதபுரம் கம நல சேவை நிலையத்தின் தலைவராகவும், மாவட்டத்தின் விவசாய சம்மேளத்தின் பொருளாளராகவும் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும் பாரிய பணிகளை ஆற்றி எம் சமூகத்தின் உயர்விற்காக உழைத்த பெருமகன் இரணைமடுக் குளத்தின் மீதான நீர்ப்பிரச்சினை தோன்றிய போது எம்மோடு ஒத்துழைத்து அவர் ஆற்றிய பணி என்பது இரணைமடு நீரைப் பயன்படுத்தி பயன்பெறும் ஒவ்வொரு விவசாயியாலும் வாழ்நாள் பூராகவும் நினைவு கூறவேண்டியவை அச்சம் என்பது அவரது உள்ளத்தில் தோன்றிது இல்லை பிரச்சினைகளைக் கண்டு பின்வாங்கியதும் இல்லை சொல்லிலும் செயலிலும் உறுதியாகவே செயற்பட்டார் தனக்குள்ள ஆர்வம், வேகத்தை அதே நிலையில் தன்னோடு சேர்ந்தவர்களையும் காரியத்தில் ஈடுபடுத்துவதில் அவருக்கு நிகர் அவரே அவரின் உடலில் இருந்த நோயை கூட வெளியில் காட்டாது அனைத்து காரியங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்வின்றி ஈடுபட்ட அவரை 2017 சிறுபோகத்தில் ஏற்பட்ட நீர் தட்டுப்பாட்டின் போது இறுதி நாள் ஒன்றில் அவரை வயல் வெளியில் கண்ட போது மிகவும் சோர்வுற்றவராகக் காணப்பட்டார்.

என்ன பாஸ்கர் என கேட்ட போது அமைதியான சிறப்புடன் வருத்தம் தான் வைத்தியசாலையில் இருந்தனான் என கூறினார். ஒய்வாக இருக்கலாமே என கூறிய போது வயலைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது என கூறினார். நான் அவருடன் உரையாடிய இறுதி நினைவுகள் அவையோ இவரை இழந்தது ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாக எமது இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளத்தினர் எண்ணித் துயருற்றுள்ளோம்.

அவரது ஆத்மா சாந்திக்காகவும் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் அமைதிக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மு.சிவமோகன்
செயலாளர்
இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து நினைவில் நிலைத்து விட்ட அமரர் சண்முகநாதன் பாஸ்கரன்

வன்னிப் பெருநிலப் பரப்பில் வளங்கள் பல பொருந்திய வட்டக்கச்சி ஊரில் கோவிலும் சுனையும் சூழ்ந்த ஆறுமுகம் வீதி பகுதியில் உதித்த பாஸ்கரன் இளைமையில் தொடக்கம் சுறுசுறுப்பானவனாக இருந்து அதி உத்தம பொது நல சேவைகளால் மற்றையவர்களை மதித்தும் மற்றையவர்களால் மதிக்கப்பட்ட பாஸ்கரன் இன்று வானுறையும் தெய்வத்துடன் இணைந்து விட்டார். பாஸ்கரன் பாடசாலை நாட்களில் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் விவசாய பாடநெறியிலும் முன்னிலையில் திகழ்ந்துள்ளான். பாஸ்கரன் வாழ்வின் பெரும் பகுதியில் போரும் பொருளாதார தடையும் நீடித்த காலத்தில் தான் அந்தக் காலத்திலேயே விவசாயத்தில் புதிய புதிய கண்டு பிடிப்பு சிறந்த அறுவடை ஆகிய விவசாய மேம்பாட்டால் பெருமிண்மிய மேம்பாட்டு நிறுவனம் மற்றும் திணைக்களத்தால் உயர் பரிசுகள் வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டும் உள்ளார். படிப்படியாக தேசிய விருதுகள் கூடப் பெற்றுள்ளான். விவசாயிகளுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து அமரத்துவம் அடையும் வரை சிறந்த விவசாயிகளின் தலைவராகவும் தனக்கென மட்டும் வாழாது தனது தொழிலாளர், நண்பர்கள், அயலவர்கள், எல்லோரையும் வேளாண்மை செய்கையிலும் உயர்வடைய வைத்துள்ளான் நாட்டின் சூழ்நிலைக்கமைய தேசிய உணர்வுடன் செயற்பட்டும் பங்களிப்புக்களை நல்கியும் தேசியத்திற்கே உதவியுள்ளான். இவர் வட்டக்கச்சி இராமநாதபுரம் கமநல சேவைகள் நிலையத்தில் தலைவராகவும், இரணைமடு திட்ட வலதுகரை D3 கமக்காரர் அமைப்பின் தலைவராகவும் மாவட்ட விவசாய அமைப்பின் நிர்வாக உறுப்பினராகவும் இருந்து அளப் பெரிய சேவை செய்ததுடன் குறிப்பாக மீள்குடியேற்றத்தின் பின்பு இரணைமடுகுள பாரிய அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டு மாவட்டவிவசாயிகளின் நலனுக்காக பாடுபட்டுழைத்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேறிய பின்பு வரட்சியாலும் பருவம் தப்பிய மழையாலும் எம்மவர் பட்ட துயர் அதிகம் 2016ஆம் ஆண்டு பெரும் போகத்தில் மழை பெய்ததால் எரிவடையும் நிலையில் நிலை ஏற்பட்ட பயிர்களைக் காப்பாற்ற பாஸ்கரன் எடுத்த முயற்சியால் பயிர்கள் காப்பாற்றப்பட்டது. புழுதி ஆற்றிலிருந்து நிலைப்பெற்று சிவசுந்தரம் வீதி இராமநாதபுரம் வயல்களுக்கு நீர்பாசன ஒழுங்கு செய்தார் குஞ்சு மீசா குளத்திலிருந்து வாய்க்காலமைத்து நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் சில்வாவீதி கமக்காரர் பயன்பெற உதவினார். அனைவரும் பயன்பெற குளக்கட்டில் நாவல் மரநிழல்தான் அவரது குடியிருப்பு அக்காட்சி என்றும் நிழல்படமாக தெரிகின்றது. அவரது இறுதியான ஆசையும் நிறைவேறியது மம்மில்குளத்தை ஒரு புனித நீர்த்தடாகமாகவும் ஒரு பொழுதுபோக்கு மையமாகவும் எண்ணினார் அது அவரது அமரத்துவத்துக்கு முன்பே நிறைவேறிவிட்டது. படுக்கையிலிருந்து கூட இவ்அபிவிருத்தி பற்றிக் கேட்டுள்ளார். பாஸ்கரன் இந்தமண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து காட்டியவன் மற்றையவர்களுக்கு முன் உதாரணமானவன் தன் மக்களை அவைதனில் முன் இருக்கச் செய்தவன் தூர நோக்குடன் செயற்படும் நல்ல உள்ளம் கொண்டவன். இவற்றை எல்லாம் அவரது அமரத்துவ நிகழ்வுகளே நிரூபணமாகிவிட்டன.

"மரணம் வாழ்வின் முடிவல்ல சில மனிதர்கள் ஒவ்வொருவர் மனதிலும் வாழ்கின்றார்கள்" என்பதற்கமைய பாஸ்கரனுக்கும் ஒரு சரித்திரம் உண்டு.

திரு.சி.புவனேஸ்வரன்
சமாதான நீதவான்
தலைவர் மாயவனூர் மத்தி கி.அ.ச
முன்நாள் பொது முகாமையாளர் ப.நோ.கூ சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதிட வார்த்தை இல்லை அழுதிட கண்ணீர் இல்லை

அமரர் பாஸ்கரன் என் பெறாமகன் என் பாசத்துக்குரிய பிள்ளை குழந்தை பருவத்தில் இருந்தே சுறுசுறுப்பு துரித செயற்பாடு பிறரை நேசிக்கும் பண்பு, பிறருக்கு உதவியிருக்கும் கருணை உள்ளம் இவை எல்லாம் அவரோடு கூடவே வளர்ந்த குணஅதிசயங்கள் அவரின் இந்தக் குணங்களும் செயல்களும் என் எண்ணங்களோடு ஒத்துப் போனதால் அவர் என் செல்லப் பிள்ளையானார்.

யாருக்குப் பிடிக்காதோ இல்லையோ தான் சரியென்றும் நியாயமென்றும் நினைப்பதை நிறைவேற்றும் பணியில் உற்சாகமாக ஈடுபடுவார் உற்றார், உறவினர், நண்பர்களோடும் அன்போடும் கருணையுடனும் பழகுவார் யார் எந்த உதவி கேட்டாலும் முக மலர்ச்சியோடு தன்னில் முடிந்ததை செய்து கொடுப்பார்.

நண்பர்கள், அயலவர்களுக்கு ஏதும் பிரச்சனை என்றால் முன் நின்று உதவிடுவார் முடிந்தளவுக்கு அவற்றை தீர்த்து வைப்பார் இத்தகைய செயற்பாட்டால் அவர் என் இதயத்தில் நிரந்தரமாய் குடிகொண்டார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் அவரை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் இல்லாத போதும் அவரின் நலன்களையும் செயற்பாட்டையும் விசாரித்து அறிந்த வண்ணமே இருந்தேன். தான் விரும்பியவரையே வாழ்கை துணையாக கைப்பிடித்தார் அவரின் அன்பான இல்லற வாழ்க்கையில் அமரர் நான்கு ஆண் பிள்ளைகளுக்கு தந்தையானார் அவர்களின் குடும்ப வாழ்வு இனிதே தொடர்ந்தது.

புலிகளுக்கும் இராணுவத்திற்கும் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது விமான குண்டு வீச்சாலும் செல்வீச்சுக்கலாலும் எறிகணை தாக்குதல்களாலும் வட்டக்கச்சி இராமநாதபுரம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் இத்தருணத்தில் தனக்கு ஏற்படக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிராபத்துக்களையும் பொருட்படுத்தாமல் சமாதான புறாவாக பறந்து பறந்து பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்ற பணியாற்றினார். முடிந்தளவுக்கு பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்து அவர்களின் பாதுகாப்பு கவசமாகினார்.

உணவு விநியோகம் வயல்களைப் பாதுகாத்தல் நீர் நிரைகளைப் பராமரித்தல் வீதிகளைப் புனரமைத்தல் போன்றவற்றை நண்பர்களுடன் மக்களை பெரும் கஸ்டங்களில் இருந்து மீட்டிட பாடுபட்டார்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் முன்பு மிக்க புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு யுத்தத்தில் சிக்கியிருந்த தன் இரு மகன்களையும் மற்றும் சிலரையும் பாதுகாப்பாக மீட்டெடுத்தார் அதே போல் முள்ளிவாய்க்கால் சிக்கி தவித்து மரணதோடு போராடிக் கொண்டிருந்த தனது வயது முதிர்ந்த தாய், தந்தை இருவரையும் மீட்டெடுத்து அவர்களை பாதுகாப்பாக லண்டன் அனுப்பி வைத்தார்.

பின்னர் தன் முதல் மூன்று மகன்களையும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு சென்றிட வழி செய்தார். அண்ணனின் ஐந்து ஆண்களில் நடுவராக பிறந்த வீரத்துடன் செயற்பட்டு பல உயிர்களை இறுதி யுத்தத்தின் போது மரணப்பிடியில் இருந்து காப்பாற்றினார்.

என் அன்புள்ள பாஸ்கரா நீ இன்னும் பல ஆண்டுகள் இருப்பாய் சிறப்பாய் இருக்கும் போது நான் வருவேன். உனைப்பார்க்க என்று நினைத்தேன் ஆனால் காலன் உன்னை இந்த வயதில் எங்களிடமிருந்து பிரிந்து விட்டார்.

உன் நினைவுகள் என் இதயத்தை விட்டு என்றுமே அகலாது

என்றும் உன் நினைவுடன்
சித்தப்பா (க.செல்வநாயகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் உறையும் உத்தம உயிர்ப்பு

அமரத்துவம் என்பது அனைவருக்கும் பொதுவானது எனினும் சிலரது அமரத்துவம் சார்ந்த சமூகத்தின் வாழ்வியல் இயக்கத்தையே அமரத்துவம் அடையச் செய்து விடுமோ என்ற அச்சத்தை அனைவர் மனங்களிலும் தோற்றுவித்துவிடுகின்றது. அத்தகைய பெருவாழ்வு பெற்றவர்களின் வரிசையிலே அமரர் சண்முகநாதன் பாஸ்கரன் அவர்களும் இணைந்து கொள்கின்றார். வட்டக்கச்சியால் அவர் பெருமை பெற்றார் என்பதற்குப் பதிலாக அவரால் வட்டக்கச்சி பெருமை பெற்றது. என்பதுதான் சாலப்பொருந்தும் விசையுறு பந்தினைப் போன்று இவர் மனமும் அசைவுற்று நின்றதால் வசையற்ற வாழ்வு வாழ்ந்து இன்று எம் தாயக மண்ணிலும் மக்களின் மனங்களிலும் இசைபெற்றுத் துலங்குகின்றார்.

போர்கலச் சூழல் மற்றும் இடப்பெயர்வு என நாம் இன்னற்பட்ட வேளைகளில் தானும் அவ்வலிகளைச் சுமந்து பிறரின் துன்பங்களில் பங்கெடுத்து தன்னால் இயன்ற துயர் துடைக்கும் பணிகளில் ஈடுபட்டார். தேசவிடுதலை மீது தீராக்காதல் கொண்டு அதனை அவாவி நின்று சுதந்திர வேட்கையின் பிரதிபலிப்பாக விளங்கினார். யுத்தத்திற்குப் பின்னரான மீள்குடியேற்ற காலப்பகுதியில் அரச இயந்திரம் தமிழ்த்தேசிய உணர்வாளர்களை உற்றுநோக்கிக்கொண்டிருந்த 2010ஆம் ஆண்டுக்கு பின்னராக சூழலில் எமக்காக எம் மக்களது மனக்கதவுகள் திறந்திருந்த நிலையிலும் வீட்டுக்கதவுகள் மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் துணிச்சலுடன் தனது வீட்டுக்கதவுகளைத் திறந்து எம்மை வரவேற்று, உணவளித்து, உறங்கவைத்து விடுதலைக்கான காலப்பணிக்கு தளம் அமைத்து தந்த பெருமகனாக எங்கள் பாஸ்கரன் அண்ணன் எமக்கு எல்லாமுகமாகக் கைகொடுத்தார். இதற்காக அவர் அரசபடைக்கூலிகளினால் தாக்கப்பட்டார் என்பதும் வேதனையோடு பதிவு செய்யப்பட வேண்டியதாகும். இலட்சியம் குன்றிடாக் கொள்கை வீரனாக எனது உறவினன், அயலவன் என்பதற்கப்பால் என் உள்ளத்தில் உறைந்த உத்ம சக்தியாக அற்புதமான அன்புப் பிணைப்பாகவே நான் பாஸ்கரன் அண்ணனைத் தரிசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்துறையை நேசித்து விவசாய மன்னாக இம்மாவட்டத்தின் வனப்புக்கு உரமிட்டவர். ஓயாத உழைப்பாளியாக புதியவற்றைச் சந்திக்கும் திறன் பெற்று விளங்கினார். அவரது ஒவ்வொரு இதயத்துடிப்பும் தாயக பூமியின் பசுமையையும், பொருளாதார வளத்தையும் நோக்கி சப்தித்தது.

மாவட்ட விவசாய சம்மேளனத்தின் பொருளாளராக, மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்கத்தலைவராக, வட்டக்கச்சி கமக்கார அமைப்பு மற்றும் இராமநாதபுரம் கமநலசேவை நிலையம் என்பனவற்றின் தலைவராக இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஸ்தாபகராக, உறுப்பினராக பல முனைப்புக்களில் சேவையாற்றிய விவசாயத் தொண்டனாக இவர் சுவடு பதித்தார். s.p 2000 (Shanmuganathan paskaran) என்ற நெல் இனத்தை அறிமுகம் செய்து அமோக விளைச்சலுக்கு வித்திட்ட வேளாண்மையின் விழுதாக விளங்கினார்.

குஞ்சுபீசான்குளம் மற்றும் புழுதியாற்றுக்குளம் என்பவற்றின் புனரமைப்பிற்கு உந்து சக்தியாக இவர் இரணைமடுக்குள நீர்ப்பிரச்சினை எழுந்த போது அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி தீர்க்கதரிசனப்பார்வையுடன் தீர்க்கமான ஆலோசனைகளை முன்வைத்து அவ்விடயத்தில் வெற்றி காண்பதற்கு ஆற்றிய சேவை மகத்தானது.

கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினராக இருந்து சங்க வளர்ச்சியில் கருதூன்றிச் செயலாற்றினார். கலைவாணி விளையாட்டுக்கழகம், கலைவாணி சவாரித்திடல் அமைத்து ஊருக்கு பெருமை சேர்த்தார். சிறுவயது முதல் வாலிப வயது வரை மரதன் ஓட்டம் என்றால் பாஸ்கரன் அண்ணன் இல்லாமல் இருக்காது. மாட்டுவண்டில் சவாரிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற பெருமைக்குரியவர். வட்டக்கச்சி கிருஷ்ணன் கோயில் மணிநாதமும் அவரது நாமம் சொல்லுமளவிற்கு பக்தி பிரவாகத்துடன் ஆலயப்பணிகளிலும் ஈடுபாடு கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பெரு வெளியின் காலநதியில் அள்ளுண்டு போகும் சாமான்ய மனிதராக அல்லாது சரித்திரம் படைத்த மண்ணின் மைந்தனான எங்கள் பாஸ்கரன் அண்ணனின் மறைவை எங்கள் மனங்கள் ஏற்க மறுக்கிறது. அவர் எங்கள் மனங்களில் உறைவதனால் மரணம் பொய்த்து விட்டது.

" ஒருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்னும் வள்ளுவமாலையை அண்ணனுக்கு அணிவித்து காலடிச்சுவடுகள் அழிந்தாலும் காலச்சுவடுகள் அழியாது என்ற மன அமைதியுடன் மௌனிக்கின்றேன்.

மண்ணில் மறைந்தவர் – எங்கள்
மனங்களில் உயிர்த்துள்ளார்.

நன்றி

சி.சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் – கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியைச் சேர்ந்த திரு சண்முகநாதன் பாஸ்கரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் சிறந்த விவசாயிகளில் ஒருவர் விவசாயத் திணைக்களத்தின் குறிக்கோளாகிய விவசாய உற்பத்தி நிலப்பரப்பை கூட்டுவதிலும், உற்பத்திகளிலும் தனிநபர் என்ற ரீதியில் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்யவர்

அமரர் பாஸ்கரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கத்திற்கு சில ஆண்டுகள் தலைவராக இருந்து திணைக்களத்திற்கும், பணியாளர்களுக்கும் தன்னாளான ஒத்துழைப்பை வழங்கியவர். அத்துடன் தான் சார்ந்த பிரதேசத்தின் கமக்காரர் அமைப்பு தலைவராகவும் இருந்து செயற்பட்டவர். இவைகள் அனைத்தும் இவரது வயதிற்கு அப்பாற்பட்ட செயல்களாகவே இருந்தன.

இம் மண்ணிற் பிறந்தவர்கள் யாவரும் இறப்பது என்ற நியதியில் இணைந்து கொண்ட அமரர் பாஸ்கரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன். அன்னாரின் மறைவால் துயருற்று இருக்கும் மனைவி, பிள்ளைகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விரிவாக்கம்
திருமதி.ஸ்ரீ.ஆனந்தராசா
(ஓய்வு நிலை பிரதி விவசாயப்
பணிப்பாளர்)
கிளிநொச்சி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா.கணபதிப்பிள்ளை
எண்.24/3, 1/1 Frankafurt place
முன்னாள் அதிபர் – தமிழ்ப்பிரிவு றோயல் கல்லூரி
Colombo 04
கொழும்பு 07.
22.10.2017.

## மனத்துக்கண் மாசிலா மாமனிதன் திரு. பாஸ்கரன்

வட்டக்கச்சி மருத நிலத்தில் பண்புடன் வாழ்ந்த அல்லைப் பிட்டியூர் சண்முகநாதன் அவர்களின் புதல்வனாய் தோன்றி வட்டக்கச்சி மகா வித்தியாலத்தில் கல்வி கற்றுத் தேறி, வட்டக்கச்சிக்கு பெருமை சேர்த்து தந்த விவசாயபோதனாசிரியர், 1970களில் திருவள்ளுவர் விவசாயக்கழகத்தை நிறுவி வட்டக்கச்சியின் பெயரை அகில இலங்கைக்கும் பரப்பியவர் அத்தகைய பெருமை சார் அமரர் திரு.பாலசிங்கம் அவர்களின் மகள் கலா ஆசிரியையைத் திருமணம் செய்து மங்கலம் என்ற மனைமாட்சியின் அடையாளமான நன்கலன்களாக நான்கு புத்திரர்களைப் பெற்றெடுத்தார். நான்கு பிள்ளைகளையும் நல்லவர்களாகவும், பண்புடைப் பிள்ளைகளாகவும் வளர்த்து அவர்களில் மூவரை நாட்டின் பொருத்தமற்ற சூழல் காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைத்தார். நான்காவது மகனை தன்னுடனேயே சேர்த்து வாழவைத்தார். அவர்கள் மணப்பருவம் எய்தியதும் பொருத்தமான இடங்களில் முறையாகத்திருமணம் செய்து வைத்தார்.

தான் பதவிகளை தேடிச் சென்றவரல்ல பாஸ்கரன் ஆனால் பதவிகள் அவரைத் தேடி வந்தன. நல்ல குடும்ப தலைவராக நல்லகணவராக தந்தையாக, நல்ல மாமாவாக, நல்ல கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக, கமக்கார அமைப்பு தலைவராக, வாணி விளையாட்டுக் கழகச் செயலாளராக என்று அவர் ஏற்றுக் கொண்ட பதவிகளுக்கெல்லாம் பெருமை சேர்த்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடின உழைப்பாளியாய் முதலாளியாக இருந்தபோதும் தொழிலாளர்களோடு ஒன்றாக தொழில் செய்யும் அந்த நுட்பம் பாஸ்கரனுக்கே உரிய தனி நடத்தை. அவரோடு உடன் இருந்தோர் கருத்து தெரிவிக்கும் போது பாஸ்கரன் ஒரு தொழிலில் இறங்கி விட்டால் அத் தொழிலை முடிக்காமல் விட்டதில்லை என்பதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு வரும் சகல அலுவலர்களிடமும் நட்புரிமையுடன் பழகி அவர்களை வட்டக்கச்சியின் பால் நாட்டங்காட்ட வைத்ததே பாஸ்கரனின் தலையாயபணியாகும். நெல்லுற்பத்தியில் புதிய வகை நெற் செய்கையை எல்லாம் தொடக்கி வைத்தவர் பாஸ்கரன். புதிய தொரு நெல்வகையை அறிமுகப்படுத்தியவரும் அவரே.

இத்தகைய எல்லா சிறப்புக்களையும் தன் 53 வயதுக்குள் முடித்து இறையடியை நாடிய பாஸ்கரனின் ஆத்மா நித்தியத்தில் இழைப்பாறும் என்பதில் ஐயமில்லை.

"தற்கார் தவிலர் என்பது அவரரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க எச்சம் என்ற சொல்லுக்கு அவர் விட்டுச் செல்லும் பிள்ளைகள் என்று பொருள் கொண்டாலும் அல்லது அவர் விட்டுச் சென்ற புகழ் என்று பொருள் கொண்டாலும் பாஸ்கரன் தக்காராகவே விளங்குவார்.

தன்நெஞ்சறியாப் பொய்யாத இயல்புடன் எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியமனத்துடன் சிறந்த பூவுலகு வாழ்ந்த பாஸ்கரன் விண்ணுலகில் தெய்வத்தின் பாதங்களில் சேர்ந்தே வாழ்வான்.

இவன் ஆத்மா சாந்தி பெற இறையாசியை வேண்டுகின்றேன்.

–சாந்தி–

அன்புடன்

மா.கணபதிபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த ஆயுள்வேதம் நோக்கி...

" நோய் நாடி நோய் முதல் நாடி "

தக்க அனுபவ மருத்துவரின் துணையோடு மூலிகை இரகசியங்களின் மகத்துவத்தினை நம் தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்வோமாக! நம் மண்ணுலஇயற்கையின் அருட்கொடையாக இறைவன் நமக்களித்த அற்புதமான மூலிகைக் கற்பத்தை கண்டும் காணாமலும் இருந்து வாழ்ந்தமையால் தான் இன்றைக்கு இத்தனை நோயும் அலங்கோல வாழ்வும் இப் பூவுலகில் எப்பயனும் இல்லாதது உயிர்காக்கும் நோக்கமும் இல்லாது எந்த ஒரு மூலிகையும் உயிர்தெழலில்லை என்பது முக்காலமும் அறிந்த உண்மையே!

மருத்துவ தேவைகளாக நம்மை காக்க சஞ்சீவி மூலிகைகள் அவதானம் எடுத்துள்ளனர். அத்தனை மூலிகையும் தாய்மை வடிவில் நமக்கெல்லாம் பாலூட்டி வருகின்றன உயிர்காப்பதன் முனைப்பும் நோய் தீர்க்கும் தவிப்பும் இந்த தேழமை மிக்க மூலிகைகளிடம் பரந்த பட்டு கிடக்கின்றன.

ஆயுள் வேதம்

ஆயுள் + வாழ்க்கை முறை

மனம், உடல் எந்த வகையில் பாதுகாத்தல் என்பதை உள்ளூர் புரிய வைப்பதே ஆயுள் வேதம்

உணவே மருந்தாகவும், மருந்தே உணவாகவும் எமது வாழ்வில் இருக்க வேண்டும் கால அர்த்த கருமங்களின் குறைந்த (அதிமிருத்திய) கூடிய யோகங்களிலேயே ரோகம் ஆகின்றது வாத பிந்தகபம் ஏற்ற நிலையில் இருந்தால் முத்தாது திடநிலையில் இருக்கும் வாத, பித்த, கபம் திரிபு நிலை அடைந்தால் முத்தோஷம் ஆகும். உடம்பில் நோய் இருப்பதனை நாடி மூலம் பரீட்சித்து அறிந்து சிகிச்சை செய்வதே ஆயுள் வேதமாகும்.

அதே மேல் சப்த தாதுக்கள் (ரச, ரத்த, மாமிச, மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, சுக்கில(சுரோணிதம்) ஒவ்வும் நிலையில் சக வாழ்வே! ஒவ்வாத உணவு வகை (உ+ம்:- தயிர்+ இறைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சி வகை, கணவாய், நண்டு, இறாள், இரவில் கீரை வகை, அன்னாசி மற்றும் தலையில் குளித்த பின் பலாப்பழம் உண்ணுதல்) மற்றும் செயற்பாடு (பாசித்திருத்தல், அதிக உணவு, நேரம் தவறிய குளிப்பு, நேரம் தவறிய உணவு........ போன்ற பல) நோயாகும்.

நீண்ட அகவாழ்விற்கு தினச்சரிஜை முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

01. வைகறை ஜாபகம் துயில் எழல் தான் செய்யும் நல்லறமும் ஒன்பொருளும் சிந்தித்தல், தாய், தந்தையரை தொழுதெழல், கண்ணாடி, உள்ளங்கை, தீபம் ஏதாவது ஒன்றில் விழித்தெழுதல் நீண்ட வாழ்விற்கும், தொற்றும், தொற்றா பெரும் நோய்களில் இருந்து நீங்குவதற்கு காலையில் (திரிபலா) நெல்லி, கடுக்காய், தாண்டிக்காய் சூரணம் அரைத்தேய்க்கரண்டி சுடுநீரில் குடிக்க இளமை புத்துணர்ச்சி சல்ரோகம், கொலஸ்ரோல், அதிரத்த அமுக்கம், இருதய நோய் தீரும். இரத்த அத்தி என்பன கிடைக்கும்.

02. காலை பால், இஞ்சி மதியம் சுக்கு (வேர்க்கொம்பு) மாலையில் கடுக்காய் தோல் பாவிக்க வேண்டும்.

03.கற்றாளைச் சாறு +பசுப்பால் + கற்கண்டு காலையில் அருந்தினால் புத்துணர்ச்சி கிடைக்கும். இழயங்கள் புதுப்பிக்கப்படும் நாட்பட்ட உஷ்ண ரோகங்கள் தீரும். மூலவருத்தம், உள்ளங்கால், உள்ளங்கை எரிவு, முரசு கரைதல், தலைமயிர் உதிர்வு, இளநரை, பொடுகு என்பன தீரும்.

04. மூலிகைச் சாறு அருந்துதல் எம்மைச் சுற்றி உள்ள இலைகள் யாவுமே மூலிகைதான் (உ+ம்) குறிஞ்சா, வல்லாரை, வாதமடக்கி, ஆடாதோடை, கொவ்வை, வேம்பு, துளசி, விலவம், நாவல், விளாத்தி, முள்முருங்கை, கறிமுருங்கை, தவசிமுருங்கை, மாதுளம் துளிர், பலாத்துளிர், ஆவரசு, ஆத்தி, அத்தி, ஆல், அரசு, ஜாம்மரம், மணி(F) பிளாண்ட் , அறுகம்புல், நாயுருவி, முடிதும்மை, பொடுதலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசணித்துளிர், மரவள்ளித்துளிர், மொசுமொசுக்கை, சாறனை போன்ற இலகுவாக எடுக்க கூடிய துளிர் இலையாக ஒரு மூலிகையோ அல்லது பல மூலிகைகளோ ஒரு கைபிடி அளவு எடுத்து சாறாக அடித்து 1/2 cup ஒவ்வொரு நாளும் காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் இரத்தசகதி, புத்துணர்வு ஏற்படும். நோய் எதிர்ப்பு சக்தியுடன் நோய் இன்றி வாழலாம். நீரிழிவு, அதிரத்த அமுக்கம், கொலஸ்ரோல் வராது பாதுகாக்கலாம்.

01. சளிதீர:- கறுத்த பூங்கொடி (காக்கணவன்), தூதுவளை, மொசுமொசுக்கை சமனாக சாறு எடுத்து (10ml) + தேனில் நாளொன்றிற்கு 03 நேரம் குடிக்க நோய் தீரும்.

02. சளி இரத்தத்துடன் வெளியேறினால்:- நொச்சி பூ பொடி செய்து 1/2 தேய்கரண்டி தேனில் சாப்பாட்டிற்கு முன் 03 நேரம் நோய் தீரும்.

03. நீண்ட நாள் சளிதீர:- நத்தைச் சாறு எடுத்து (10ml) + தேன் 03 வேளை அருந்த நோய் தீரும்.

04. சளிரோகம் தீர:- இன்பூசல் வேர் சகாயம் + திப்பலி பொடி 1/2 தே.கரண்டி + தேன் 1/2 தே.கரண்டி மூன்று நேரம் அருந்த நோய் தீரும்.

05. எலும்புருக்கி (மெலிவு, சூடு) :- மொசுமொசுக்கை சூரணம் + தூதுவளை சூரணம் (1/2 தே.கரண்டி) சாப்பாட்டிற்கு முன் ஆட்டுப்பால் + தேனில் 03 நேரம் அருந்த நோய் தீரும்.

06. நெஞ்சுநோ, மெலிவு, துரையீரல் வீக்கம், சளி, இருமல், மண்ணீரல் வீக்கம் தீர:- பிரண்டை தண்டு, பஸ்பமாக்கி சாப்பாட்டிற்கு முன் 1 g அளவு கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. சளித்தொல்லை, மூச்சுத்திணறல்:- தூதுவளம் பழம் சூரணித்து மூக்கில் புகை பிடிக்க நீங்கும், அதே போல் மஞ்சள் துண்டும் சுட்டு புகைப்பிடிக்கலாம்.

08. கக்குவான் இருமல்:- நஞ்சறுப்பான் இலை சூரணம் சாப்பாட்டிற்கு (1/2 தே.கரண்டி) தேனில் கலந்து கொடுத்தல்.

09. கற்பப்பை பலம் பெற:- சதகுப்பை, கருஞ்சீரகம், மரமஞ்சள் பொடி செய்து சாப்பாட்டிற்கு முன் பனை வெல்லத்துடன் கொடுத்தல்.

10. கருவுற்ற தாய்மார், இருதய நோயாளர், இரத்த அத்திக்கு உகந்த பழக்கம் :- மாம்பழம், மாதுளை, கொய்யா, நெல்லிக்கனி, மங்குஸ்தான், தக்காளி, திராட்சை....

11. அடுத்தடுத்து கருச்சிதைவு ஏற்பட்டால் :- அசோகம்பட்டை, மாதுளை வேர், மாதுளை தோல்பட்டை சூரணித்து, 1/2 தே.கரண்டி 03 வேளை தேனில் சாப்பிடுதல்.

12. குழந்தை இன்மைக்கு:- வேப்பம் பூ + மிளகு சூரணித்து 03 நேரம் தேனில் கொடுத்தல்.

13. நீரிழிவு நோய் :- நாவல் விதை சூர்ணம், கொவ்வை இலை சூர்ணம் வெந்தயம் வெண்டிக்காய் கடைந்து நீர் பருகுதல்.

14. பெரும்பாடு தீர, (அதிஇரத்தப்போக்கு)தீர, கற்பப்பை பலத்திற்கு :- தென்னம் பூ விரியாத பாளை, நாவல்பட்டை(உள்புறம்) ஆல்/அத்தி/அரசு ஏதாவது ஒன்று சகாயம் மூன்று நாட்கள் 30ml அளவில் சாப்பாட்டிற்கு முன் சாப்பிடுதல்.

15. ஆண்மை பெற :- சுரக்காய் விதை + கருப்பட்டி சேர்த்து 10ப, 3 நேரம் சாப்பாட்டிற்கு முன் சாப்பிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஆண்மலடு:- அரசம் பழ விதை சூரணம் பாலில் 1/2 தே.கரண்டி 3 வேளை சாப்பாட்டிற்கு முன் (21 நாட்கள் சாப்பிட வேண்டும்)

17. தேகம் பொன்னிறமாக:- ஆவாரசம் பூ + பால் காலையில் சாப்பிடலாம்.

18. உடல் அழகிற்கு:- கொன்றை வேர் பட்டை சகாயம் பாலில் குடித்தல் அவுரி இலை பொடி 5ப பாலில் உணவுக்கு பின் (3 நேரம்) சாப்பிடுதல்.

19. முகம் பள பளப்பாக :-குளிப்பதற்கு முன் காலையில் தேன் பூசி 5 நிமிடம் மசாஜ் செய்தல் நன்கு கனிந்த நாட்டு வாழைப்பழம் olive oil சேர்த்து முகத்திற்கு பூசி மசாஜ் செய்து (1மணி நேரத்தின் பின் குளித்தல்)

20. முக சுருக்கம் நீங்க :- முட்டைகோஸ் (கோவா) சாறு பூசி வரலாம்.

21. சருமரோகம்(கடி,எரிவு):- நொச்சி + குப்பைமேனி அரைத்து பூசி குளித்து, ஈரளிப்பிலாது துடைத்து தே.எண்ணெய் பூச வேண்டும்.

22. வேர்க்குரு :- பய்யாசி பால் + வெங்காய சாறு சேர்த்து சாப்பிடுதல்.

23. கொப்புளிப்பின்:- அகத்தி இலை சாறு பூச வேதனை குறையும்

24. கருப்படை :- கொவ்வை இலை சாறு + கருஞ்சீரகப்பொடி பூசி (1மணித்தியாலயத்தின் பின் குளித்தல்)

25. சொறி, சிரங்கு:- பசும் சாணம் பூசி குளித்து பிரண்டைத் தண்டு சாறு 10ml வெறும் வயிற்றில் 1 வாரம் குடித்தல்.

26. பூச்சிக்குடி நீர்:- கிருமி சத்துரு, வாய்விடங்கம், எலுச்சவியன் வேர், வேப்பங்கூர், மாதுளை வேர் வகை 5g குடிநீர் செய்து குடித்தல்(3 நேரம்)

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு காலை உணவு 09.00உள் முழு உணவாக சாப்பிடுங்கள் மதியம் 01.30 மணிக்குள் 3/4 பங்கு உணவு சாப்பிடுங்கள் உடல் ஆரோக்கியமாக சிறப்பாக வாழ உணவு முறைகளை சரியாக அமைத்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய்

- 
- 
- வெந்தயம் ஊறிய நீர் அதிகாலை குடிக்க வேண்டும்.
- 
- வெண்டிக்காய் இரவில் வெட்டி நீரில் ஊற விட்டு அதிகாலை குடிக்கலாம்.

- கொவ்வைக்கனி கறியாக சமைத்துஉண்ணலாம்.

# நீரிழிவுக்கு சூர்ணம் (தூள் மருந்து)

குறிஞ்சி சூர்ணம், ஆவரசு சூர்ணம், கருஞ்சீரக சூர்ணம், கொவ்வை இலைச் சூர்ணம், கடல் இறாச்சிப்பட்டை சூர்ணம், நாவல் விதை சூர்ணம், ஏதாவது ஒரு சூர்ணம் சாப்பிடமுன் 1/2 தே.கரண்டி 3 நேரம் பாவிக்கலாம்.

# தலையில் பொடுகு, இளநரை முடி உதிர்தல், தலைக் கடிக்கு

- 1 தே.கரண்டி கருஞ்சீரகம்(பவுடர்) உள்ளி அல்லது வெங்காய சாறு தேசிப்புளி கலந்து 1/2 மணித்தியாலம் தலையில் பூசி ஊறிய பின்னர் சியாக்காய் பவுடர் பூசி முழுகவும் யாவும் தீரும்.

- தலைமுடிக்கு மூலிகை சேர்த்து காய்ச்சிய தேங்காய் எண்ணெய் சிறந்தது
  சம்போ வைப்பதனை தவிர்க்கவும்.

- சீயாக்காய் பவுடர் :- சீயாக்காய், வெந்தயம், பயறு, பச்சைஅரிசி, அரிசி, கருஞ்சீரகம், தேசிக்காய் ஓடு, மாதுளம் சாறு சேர்த்து பவுடர் ஆக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 1963 | 2017 |
| - | - |
| 09 | 10 |
| - | - |
| 25 | 05 |



அமரர் **சண்முகநாதன் பாஸ்கரன்**

இல:887, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.

**மலர்ந்த முகம் வாடியதோ**
**பார்த்து பழகியதால் மறக்கமுடியவில்லை**
**விழிவழியும் நீர்துடைக்க எம் கரம் மறுக்கின்றது**
**பார்விட்டு போய்விட்டாய் நீ**
**எமை படுதுயரில் ஆழ்த்திவிட்டு……**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

கோபால் குடும்பம்
விசுவமடு.

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 25 | 05 |
| . | . |
| 09 | 10 |
| . | . |
| 1963 | 2017 |



அமரர்

**சண்முகநாதன் பாஸ்கரன்**

உள்ளத்தில் உயர்வாகி
இதயத்தில் இறையாகி
உண்மையை உயிராக்கி
உழைப்பை உன் அடிநாதமாக்கி
ஊர் போற்ற வாழ்ந்தவரே
இன்று எட்டாத உயரத்திற்கு
சென்று விட்டாய்!
தந்தையே
உங்கள் அன்பளிப்புகள்
எம் இதயங்களில்
அழியாத சுடராக என்றும்
சுடர் விட்டு எரியும்!
உங்கள் பாதங்களில்
எம் கண்ணீர்
அஞ்சலிகளை
காணிக்கையாக்குகின்றோம்!

தந்தையின் துயரத்தால் துயருறும்
நிரோஷின் நண்பர்களாகிய
"வின்சென்ட், செல்சினா"
மலேசியா & சிங்கப்பூர்
(மற்றும் 2007 O/L மாணவர்கள்)

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சண்முகநாதன் பாஸ்கரன்

தோற்றம்:- 1963.10.25 மறைவு :- 2017.10.05

அன்பு கொண்ட உங்கள் உயிர்
எமை விட்டுப் போனதே...!
ஆலமரம் சாய்ந்ததால் விழுதுகள்
இங்கு வாடுகின்றதே
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்கின்றதே

அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

ந.சீலன்



# கண்ணீர் அஞ்சலி...!

தோற்றம்
25.09.1963

மறைவு
05.10.2017

இறப்பும் பிறப்பும் வாழ்க்கையின்
நியதியல்லவா எப்படி தேற்றுவது எம் மனதை
அந்தி சாயும் வேளை
இடியாய் வந்ததே உம் செய்தி
ஊருலகும் போற்றும்
தர்மராய் வாழ்ந்தவரே.!
என்ன அன்போ யாருக்கு உங்கள் மீது
எமைப் பிரித்து உமை அழைத்தான்
மீண்டுமொருமுறை உங்கள் விழிகள்
எமை நோக்காதா...?
ஏங்கித்தவிக்கின்றோம்
ஈரவிழிகளுடன்.....!

ஓம் சாந்தி! சாந்தி !!சாந்தி!!!

D 3 சமூகசேவையாளருமான

அமரர்

## சண்முகநாதன் பாஸ்கரன்

பிரபா அண்ணா
குடும்பத்தினர்
இல.252 சில்வா வீதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதபுரம் கமநல சேவைநிலையத்தில்
பல வருடங்களாக தலைவராகப் பணியாற்றியவரும்,
பல அமைப்புக்களில் தனது கடமைகளைத் திறமையாக செயற்பட்டவரும்,
பிரபல விவசாயியும் ஆகிய திரு ச.பாஸ்கரன் அவர்களுக்கு

# விழிநீர் அஞ்சலி

மண்ணில்
25
09
1963

விண்ணில்
05
10
2017



அமரர்
## சண்முகநாதன் பாஸ்கரன்

அறநறர் வீதி மட்டக்கச்சி

கோபுரம் சாய்ந்ததே
கொடுந்துன்பம் நேரிட்டதே
இணையற்ற உங்கள் நீண்ட காலச் சேவை
நேர்த்தியான பொறுப்பான உம் கடமை
எங்கே கிடைக்காதா என்று
தாங்க முடியாத துயரத்தில்
தவிக்குதையா எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் தாங்கள்
ஆன்மா இறைபாதம் சேர
இறைவனை இறைஞ்சுகிறோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இராமநாதபுரம் மேற்கு கமக்கார அமைப்பு
இராமநாதபுரம்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
25.09.1963

உதிர்வு
05.10.2017



அமரர்
## சண்முகநாதன் பாஸ்கரன்

அன்னாரின் மறைவு குறித்து நாம் துயர் கொள்வதுடன்
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள்
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

பிரிவால் துயருறும்,
செ.சிவப்பிரகாசம் குடும்பத்தினர்
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 25 | 05 |
| 09 | 10 |
| 1963 | 2017 |

## அமரர்
## சண்முகநாதன் பாஸ்கரன்

உயிருக்குள் உயிரான
ஒளியின் திருவுருவே
வீசும் காற்றோடு
கலந்திட்ட மூச்சிலும்
உம் பிரிவால் வாடும்
கண்ணீரும் காயவில்லை
விடியும் ஒவ்வொரு பொழுதும்
உன் முகம் தேடுதே

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்

[illegible] [illegible] [illegible]

மயிலனூர் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்

மயிலனூர்

# விழிநீர் அஞ்சலி



அமரர்
## சண்முகநாதன் பாஸ்கரன்

[illegible]

[illegible] [illegible]

அன்பும் பாசமும் [illegible]
அன்னைத்து பாச மழை பொழிந்து
கொஞ்சிக்குலாவி கூடி மகிழ்ந்துவந்த
நேசக் கதை பல பேசி
சோகம் எது வெளியும்
சொல்லாமல் போக லாமோ

பகலென்ன இரவென்ன உதவியென
அழைத்தால் மறுகணம் வந்திடுவீர்
பெற்றவருக்கு பிள்ளையாய்
எமக்கு உற்ற சகோதரனாய்
எந்நாளும் எம் அருகில்
நீர் இருந்தீர்
எம் ஊரை மேம்படுத்த
எந்நாளும் பணி செய்வீர்
இறைவன்பணி அது என
மெய்த்திருந்து உரைத்திடுவீர்

ஆற்றாத் துயரம் தந்து
எமை அழவைத்து
இன்று பாரை விட்டுச்
சென்றதேனோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்

[illegible]

[illegible]
[illegible]
[illegible]



# கண்ணீர் அஞ்சலி

## சண்முகநாதன் பாஸ்கரன்

ஆறுமுகம்தோட், வட்டக்கச்சி

மலர்வு :- 25.09.1963
உதிர்வு :- 05.10.2017

ஆதவன் எழும் வேளை
அவன் தாழ் சேர்ந்ததேனோ?
[illegible]
தொண்டாய் தான்
நினைத்து தோள் கொடுக்க
அண்ணாவே
எழுந்து தான் வாராயோ
எம் கிராமம் அழுகிறதே
சுற்றம் தேம்பி நிற்கிறதே
தேற்றுவார் ஆர் உளரோ?
அத்தனை செயலையும்
அவர்தான் இனி இயக்க
எங்குளரோ?
பார் போற்ற சீராக வாழ்ந்த
பாஸ்கரன் அண்ணாவே

தலைமகன் போல் தான் தோன்றி
கடுகதியாய் விண்ணகம்
சென்றாலும் உம் செயலால்
நீங்கள் இவ் உலகில் வாழ்கிறீர்
நிம்மதியாய் தூங்கிடுவீர்
அப்படியே தூங்கட்டும்
[illegible]
அரவணைக்க மறுப்பானா?
இணைந்திருக்கட்டும்
இறைவனுடன்
இரண்டறவே என்று
இறைவனை
இறைஞ்சுகின்றோம்

நா.சரன்(குடும்பம்)
இல.156, சில்லடி வீதி
வட்டக்கச்சி



# இதய அஞ்சலி...!

மண் மகிழ
1963 - 09 - 25

கண் நெகிழ
2017 - 10 - 05

அமரர்

## சண்முகநாதன் பாஸ்கரன்


அன்பு கொண்ட உங்கள் உயிர்
எம்மை விட்டு போனதே!
ஆலமரம் சாய்ந்ததினால் விழுதுகள்
இங்கு வாடுகின்றதே!
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்கின்றதே!
தனித்து எமை வாழவிட்டு இன்று நீங்கள்
போனதுவும் நியாயமா!
உறவுகள் பத்துபேர் இருந்தென்ன
உலகிலே தேடினாலும் ஒருபோதும்
தேறிடாது - எம்மனம்
தேடினாலும் காணமாட்டோம் உங்கள்
இனியமுகத்தினை...!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லாத்துயர் கொண்டது வட்டக்கச்சி



சண்முகநாதன் பாஸ்கரன்
ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி
தோற்றம் :- 25.09.1963 மறைவு :- 05.10.2017

குடும்பத்தினரின் துயரில் இணையும்
கிராம அபிவிருத்திச் சங்கம்,
[illegible] கமக்கார அமைப்பு,
[illegible] தெற்கு

# பிரியாத்துயர் பகிர்கின்றோம்

## சண்முகநாதன் பாஸ்கரன்

மலர்வு :- 25.09.1963 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி உதிர்வு :- 05.10.2017



வட்டக்கச்சி கிராமத்தின் பெருமை நீர் ,கரைச்சிக்கிழக்கு பலநோக்கு கூ.ச உபதலைவராய்
R.D.S தலைவனாய், கமக்கார அமைப்புத் தலைவனாய், வட்டக்கச்சி கலைவாணி
விளையாட்டுக் கழகத் தலைவராய் என்றும் எல்லாச் சங்கங்களிலும் உன் சேவையாய்
நிலைத்திருந்தாய். இன்று நீ இல்லாத இந்த மண் இருண்டு கிடக்கிறது. உன் வதனம்
வாட நாங்கள் கண்டதில்லை, நீ தொட்டதெல்லாம் துலங்கும் நீ சொல்வதெல்லாம்
பொன் வாக்கு. விவசாயமன்னனாய் பவனிவந்தாய் வந்தோரை வரவேற்கும் மாண்புடன்
வாழ்ந்தாய் பண்பின் இருப்பிடமாய் பார்வையிலே எளியோனாய் எண்ணியதை
எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய நெஞ்சம் கொண்டவன் நீ வையகத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்த உன்னை எம் மண்ணுக்கை கீர்த்தி போதுமென்றோ தன்னுலகுக்கு ஆண்டவன்
எடுத்துக் கொண்டான் ஆறாதையா உன் பிரிவு, அழுகைதான் எம் காணிக்கை
உன் பிரிவில் துயறுரும் குடும்பத்தாரோடு எம் துயரும் பகிர்கின்றோம்.
உன் ஆத்மா நித்தியத்தில் இளைப்பாற இறைஆசியை வேண்டுகிறோம்

யோ.புஸ்பராசா (ராசன்) குடும்பம்
737, ஆறுமுகம் வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சண்முகநாதன் பாஸ்கரன்

தோற்றம்:- 1963.10.25 மறைவு :- 2017.10.05

அன்பு கொண்ட உங்கள் உயிர்
எமை விட்டுப் போனதே...!
ஆலமரம் சாய்ந்ததால் விழுதுகள்
இங்கு வாடுகின்றதே
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்கின்றதே

அன்னாரின் பிரிவில் துயறுற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

ந.சிவன் (இலங்கைத் தமிழரசுக்கட்சி



# துயர் பகிர்கின்றோம்.!

அமரர் சண்முகநாதன் பாஸ்கரன்

மலர்வு 1963 09 25

உதிர்வு 2017 10 05

அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்....

கமக்காரர் அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1963
09
25

உதிர்வு
2017
10
05

இராமநாதபுரம் நமநலசேவைநிலையத் தலைவர்
அமரர்

## சண்முகநாதன் பாஸ்கரன்

உறங்காத உள்ளமொன்று உணர்வோடு போராடி
உறைவிடம் தேடியிங்கே உயிர் மடி சேர்ந்ததெங்கே?
அலையலையாய் காரணங்கள் ஆயிரமாய் குவிந்தாலும்
காலனவன் கவர்ந்திட்ட உங்கள் இன்னுயிரை மீட்டிடுமோ?
பற்றோடு பாசமதை நட்போடு பகிர்ந்தளித்து
மெய்யான அன்பதனில் எல்லோர்க்கும் இரங்கி நின்றாய்!
பொய்யான வாழ்வென்று புறப்பட்டு போனதெங்கே?

இராமநாதபுரம் நமநலசேவை நிலைய முன்னாள் தலைவர்
கனகசபாரத்தினம்
759, சிவிக்சென்ரர்
வட்டக்கச்சி

# கண்ணீர் அஞ்சலி



## சண்முகநாதன் பாஸ்கரன்

ஆறுமுகம்றோட், வட்டக்கச்சி

மலர்வு :- 25.09.1963
உதிர்வு :- 05.10.2017

ஆதவன் எழும் வேளை
அவன் தாழ் சேர்ந்ததேனோ?
பொதுத் தொண்டை தன்
தொண்டாய் தான்
நினைத்து தோள் கொடுத்த
அண்ணாவே
எழுந்து தான் வாராயோ
எம் கிராமம் அழுகிறதே
சுற்றம் தேம்பி நிற்கிறதே
தேற்றுவார் ஆர் உளரோ?
அத்தனை செயலையும்
எவர்தான் இனி இயக்க
எங்குளரோ?
பார் போற்ற சீராக வாழ்ந்த
பாஸ்கரன் அண்ணாவே

தண்மதி போல் தான் தோன்றி
கடுகதியாய் விண்ணகம்
சென்றாலும் உம் செயலால்
நீங்கள் இவ் உலகில் வாழ்கிறீர்
நிம்மதியாய் தூங்கியவர்
அப்படியே தூங்கட்டும்
ஓங்கவனின் காலடியில்
அரவணைக்க மறுப்பானா?
இணைந்திருக்கட்டும்
இறைவனுடன்
இரண்டறவே என்று
இறைவனை
இறைஞ்சுகின்றோம்

நா.கரன்(குடும்பம்)
இல.156, சில்வா வீதி
வட்டக்கச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக்குள நீர்க் கொள்ளளவு அளவீடு

| அங்குலம் | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 17 | 16 | 15 | 14 | 13 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | |
| | 25,200 | 22,800 | 20,100 | 17,950 | 15,500 | 13,100 | 11,050 | 9,500 | 7,900 | 6,500 | 5,200 | 4,000 | 3,000 | 2,250 | 1,500 | 1,000 | |
| | 25,335 | 22,885 | 20,225 | 17,995 | 15,600 | 13,210 | 11,145 | 9,585 | 7,960 | 6,570 | 5,250 | 4,035 | 3,045 | 2,275 | 1,545 | 1,020 | |
| | 25,470 | 22,970 | 20,350 | 17,040 | 15,700 | 13,320 | 11,240 | 9,670 | 8,020 | 6,640 | 5,300 | 4,070 | 3,090 | 2,300 | 1,590 | 1,040 | |
| | 25,605 | 23,055 | 20,475 | 18,080 | 15,800 | 13,430 | 11,330 | 9,755 | 8,080 | 6,705 | 5,350 | 4,105 | 3,130 | 2,325 | 1,630 | 1,055 | |
| | 25,740 | 23,140 | 20,600 | 18,120 | 15,900 | 13,540 | 11,420 | 9,840 | 8,140 | 6,770 | 5,400 | 4,140 | 3,170 | 2,350 | 1,670 | 1,070 | |
| | 25,870 | 23,220 | 20,725 | 18,160 | 16,000 | 13,645 | 11,510 | 9,920 | 8,195 | 6,835 | 5,450 | 4,170 | 3,210 | 2,375 | 1,710 | 1,085 | |
| | 26,000 | 23,300 | 20,850 | 18,200 | 16,100 | 13,750 | 11,600 | 10,000 | 8,250 | 6,900 | 5,500 | 4,200 | 3,250 | 2,400 | 1,750 | 1,100 | |
| | 26,125 | 23,420 | 20,925 | 18,335 | 16,200 | 13,795 | 11,685 | 10,045 | 8,310 | 6,950 | 5,550 | 4,270 | 3,295 | 2,435 | 1,785 | 1,125 | |
| | 26,250 | 23,540 | 21,000 | 18,470 | 16,300 | 13,840 | 11,770 | 10,090 | 8,370 | 7,000 | 5,600 | 4,340 | 3,340 | 2,470 | 1,820 | 1,150 | |
| | 26,375 | 23,655 | 21,075 | 18,605 | 16,400 | 13,880 | 11,855 | 10,130 | 8,430 | 7,050 | 5,650 | 4,405 | 3,380 | 2,505 | 1,855 | 1,175 | |
| | 26,500 | 23,770 | 21,150 | 18,740 | 16,500 | 13,920 | 11,940 | 10,170 | 8,490 | 7,100 | 5,700 | 4,470 | 3,420 | 2,540 | 1,890 | 1,200 | |
| | 26,625 | 23,885 | 21,225 | 18,870 | 16,600 | 13,960 | 12,020 | 10,210 | 8,545 | 7,150 | 5,750 | 4,535 | 3,460 | 2,570 | 1,920 | 1,225 | |
| | 26,750 | 24,000 | 21,300 | 19,000 | 16,700 | 14,009 | 12,100 | 10,250 | 8,600 | 7,200 | 5,800 | 4,600 | 3,500 | 2,600 | 1,950 | 1,250 | |
| | 26,860 | 24,100 | 21,420 | 19,100 | 16,795 | 14,170 | 12,200 | 10,310 | 8,670 | 7,250 | 5,850 | 4,645 | 3,545 | 2,635 | 1,960 | 1,275 | |
| | 26,970 | 24,200 | 21,540 | 19,200 | 16,890 | 14,340 | 12,300 | 10,370 | 8,740 | 7,300 | 5,900 | 4,690 | 3,590 | 2,670 | 1,970 | 1,300 | |
| | 27,080 | 24,300 | 21,655 | 19,300 | 16,980 | 14,505 | 12,400 | 10,430 | 8,805 | 7,350 | 5,950 | 4,730 | 3,630 | 2,705 | 1,980 | 1,325 | |
| | 27,190 | 24,400 | 21,770 | 19,400 | 17,070 | 14,670 | 12,500 | 10,490 | 8,870 | 7,400 | 6,000 | 4,770 | 3,670 | 2,740 | 1,990 | 1,350 | |
| | 27,295 | 24,500 | 21,885 | 19,500 | 17,160 | 14,835 | 12,600 | 10,545 | 8,935 | 7,450 | 6,100 | 4,810 | 3,685 | 2,770 | 1,995 | 1,375 | |
| | 27,400 | 24,600 | 22,000 | 19,600 | 17,250 | 15,000 | 12,700 | 10,600 | 9,000 | 7,500 | 6,100 | 4,850 | 3,700 | 2,800 | 2,000 | 1,400 | |
| | 27,535 | 24,700 | 22,135 | 19,685 | 17,370 | 15,085 | 12,750 | 10,675 | 9,085 | 7,570 | 6,240 | 4,910 | 3,750 | 2,835 | 2,045 | 1,420 | |
| | 27,670 | 24,800 | 22,270 | 19,770 | 17,490 | 15,170 | 12,800 | 10,750 | 9,170 | 7,640 | 6,240 | 4,970 | 3,800 | 2,870 | 2,090 | 1,440 | |
| | 27,805 | 24,900 | 22,405 | 19,885 | 17,605 | 15,225 | 12,085 | 10,825 | 9,255 | 7,705 | 6,305 | 5,027 | 3,850 | 2,905 | 2,130 | 1,455 | |
| | 27,940 | 25,000 | 22,540 | 19,940 | 17,720 | 15,340 | 12,970 | 10,900 | 9,340 | 7,770 | 6,370 | 5,084 | 3,900 | 2,940 | 2,170 | 1,470 | |
| | 27,970 | 25,100 | 22,670 | 20,020 | 17,835 | 15,420 | 13,035 | 10,975 | 9,420 | 7,835 | 6,435 | 5,142 | 3,950 | 2,970 | 2,210 | 1,485 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரணைமடுக்குள நீர்க் கொள்ளளவு
## அளவீடு

| அங்குலம் | அடி 34 | அடி 33 | அடி 32 | அடி 31 | அடி 30 | அடி 29 | அடி 28 | அடி 27 | அடி 26 | அடி 25 | அடி 24 | அடி 23 | அடி 22 | அடி 21 | அடி 20 | அடி 19 | அடி 18 | அடி 17 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 000 | 106,500 | 100,000 | 93,500 | 87,500 | 82,000 | 76,500 | 71,200 | 66,000 | 61,000 | 55,500 | 51,000 | 46,800 | 42,800 | 39,000 | 35,100 | 31,500 | 28,200 | 25,200 |
| 0.50 | 106,750 | 100,220 | 93,750 | 87,750 | 82,210 | 76,750 | 71,360 | 66,210 | 61,170 | 55,750 | 51,170 | 46,960 | 42,935 | 39,170 | 35,350 | 31,635 | 28,335 | 25,335 |
| 1.00 | 107,000 | 100,440 | 94,000 | 88,000 | 82,420 | 77,000 | 71,520 | 66,420 | 61,140 | 56,000 | 51,340 | 47,120 | 43,070 | 39,340 | 35,600 | 31,770 | 28,470 | 25,470 |
| 1.50 | 107,250 | 100,655 | 94,250 | 88,250 | 82,630 | 77,250 | 71,680 | 66,630 | 61,505 | 56,250 | 51,505 | 47,280 | 43,205 | 39,505 | 35,850 | 31,905 | 28,605 | 25,605 |
| 2.00 | 107,500 | 100,870 | 94,500 | 88,500 | 82,840 | 77,500 | 71,840 | 66,840 | 61,670 | 56,500 | 51,670 | 47,440 | 43,340 | 39,670 | 36,100 | 32,040 | 28,740 | 25,740 |
| 2.50 | 107,750 | 101,085 | 95,750 | 88,750 | 83,045 | 77,750 | 71,995 | 67,045 | 61,835 | 56,750 | 51,835 | 47,595 | 43,470 | 39,835 | 36,350 | 32,170 | 28,870 | 25,870 |
| 3.00 | 108,000 | 101,300 | 95,000 | 89,000 | 83,250 | 78,000 | 72,150 | 67,250 | 62,000 | 57,000 | 52,000 | 47,750 | 43,600 | 40,000 | 36,600 | 32,300 | 29,000 | 26,000 |
| 3.50 | 108,250 | 101,635 | 95,300 | 89,250 | 83,475 | 78,200 | 72,440 | 67,460 | 62,250 | 57,250 | 52,170 | 47,960 | 43,800 | 40,170 | 36,670 | 32,460 | 29,150 | 26,125 |
| 4.00 | 108,500 | 101,970 | 95,600 | 89,500 | 83,700 | 78,400 | 72,730 | 67,670 | 62,500 | 57,500 | 52,340 | 48,170 | 44,000 | 40,340 | 36,740 | 32,620 | 29,300 | 26,250 |
| 4.50 | 108,750 | 102,305 | 95,900 | 89,750 | 83,925 | 78,600 | 73,025 | 67,880 | 62,750 | 57,750 | 52,540 | 48,380 | 44,200 | 40,505 | 36,805 | 32,780 | 29,450 | 26,375 |
| 5.00 | 109,000 | 102,640 | 96,200 | 90,000 | 84,150 | 79,800 | 73,320 | 68,090 | 63,020 | 58,000 | 52,740 | 48,590 | 44,400 | 40,670 | 36,870 | 32,940 | 29,600 | 26,500 |
| 5.50 | 109,250 | 102,970 | 96,500 | 90,250 | 84,375 | 79,000 | 73,610 | 68,295 | 63,250 | 58,250 | 52,920 | 48,795 | 44,600 | 40,835 | 36,935 | 33,095 | 29,750 | 26,625 |
| 6.00 | 109,500 | 103,300 | 96,800 | 90,500 | 84,600 | 79,200 | 73,900 | 68,500 | 63,509 | 58,500 | 53,100 | 49,000 | 44,800 | 41,000 | 37,000 | 33,250 | 29,900 | 26,750 |
| 6.50 | 109,750 | 103,585 | 97,125 | 90,750 | 84,835 | 79,460 | 74,120 | 68,750 | 63,710 | 58,250 | 53,320 | 49,170 | 44,970 | 41,150 | 37,170 | 33,400 | 30,035 | 26,860 |
| 7.00 | 110,000 | 103,870 | 97,450 | 91,000 | 85,070 | 79,720 | 74,340 | 69,000 | 64,920 | 58,000 | 53,540 | 49,340 | 45,140 | 41,300 | 37,340 | 33,550 | 30,170 | 26,970 |
| 7.50 | 110,250 | 104,155 | 97,775 | 91,500 | 470,335 | 79,980 | 74,555 | 69,250 | 64,130 | 58,650 | 53,755 | 49,505 | 45,305 | 41,450 | 37,505 | 33,700 | 30,305 | 27,080 |
| 8.00 | 110,500 | 104,440 | 98,100 | 91,750 | 855,600 | 80,240 | 74,770 | 69,500 | 64,340 | 58,300 | 53,970 | 49,670 | 45,470 | 41,600 | 37,670 | 33,850 | 30,440 | 27,190 |
| 8.50 | 110,750 | 104,720 | 98,425 | 92,000 | 470,800 | 80,495 | 74,985 | 69,750 | 64,545 | 58,500 | 54,185 | 49,835 | 45,635 | 41,750 | 37,835 | 34,000 | 30,570 | 27,295 |
| 9.00 | 111,000 | 105,000 | 98,750 | 92,000 | 86,000 | 80,750 | 75,200 | 70,000 | 64,750 | 58,700 | 54,400 | 50,000 | 45,800 | 41,900 | 38,000 | 34,150 | 30,700 | 27,400 |
| 9.50 | 111,250 | 105,250 | 98,960 | 92,250 | 86,250 | 81,960 | 75,420 | 70,200 | 65,960 | 58,920 | 54,585 | 50,170 | 45,970 | 42,050 | 38,170 | 34,310 | 30,835 | 27,535 |
| 10.00 | 111,500 | 105,500 | 99,170 | 92,500 | 86,500 | 81,170 | 75,640 | 70,400 | 65,170 | 60,140 | 54,770 | 50,340 | 46,140 | 42,200 | 38,340 | 34,470 | 30,970 | 27,670 |
| 10.50 | 111,750 | 105,750 | 99,380 | 92,750 | 86,750 | 81,380 | 75,855 | 70,600 | 65,380 | 60,355 | 54,955 | 50,505 | 46,305 | 42,350 | 38,505 | 34,790 | 31,105 | 27,805 |
| 11.00 | 112,000 | 106,000 | 99,590 | 93,000 | 87,000 | 81,590 | 76,070 | 70,800 | 65,590 | 60,570 | 55,140 | 50,670 | 46,470 | 42,500 | 38,670 | 34,945 | 31,240 | 27,940 |
| 11.50 | 112,250 | 106,250 | 99,795 | 93,250 | 87,250 | 81,795 | 76,285 | 71,000 | 60,795 | 60,785 | 55,320 | 50,835 | 46,635 | 42,650 | 38,835 | 31,370 | 31,370 | 27,070 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




* அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

" நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று "



எமது இதயத்தில் குடி கொண்டு நினைவுடன்
நிலைத்து விட்ட அன்புத் தெய்வம் அமரர்
சண்முகநாதன் பாஸ்கரன் அவர்கள்
நோய்கண்டு சிகிச்சை பெற்ற குறுகிய
காலத்தில் அவரைக் காப்பாற்றுவதற்காக
உதவிய மருத்துவ நிபுணர்கள் மற்றும்
நண்பர்கள் உறவினர்கள்,
அயலவர்களுக்கும், எதிர்பாராது
அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி
வந்து எமக்கு ஆறுதலழித்து உதவிகள் பல
செய்ததுடன் அமரரின் பிள்ளைகள்,
சகோதரர்கள் உறவினர்கள் அயல்
நாட்டிலிருந்து வரும் வரை இரவு பகலாக
எம்முடனிருந்து அப்பாவின்
ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்து அனைத்து
உதவிகள் செய்த அயலவர், உறவினர்கள்,
கமக்கார அமைப்பினர்,
திணைக்களத்தவர்கள், பொது அமைப்பு
சார்த்தோருக்கும் நேரில் வர முடியாது
அயல் நாட்டிலிருந்து தொலைத்தொடர்பு
இணையங்களூடாக அனுதாபத்தை
பகிர்ந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி,
கண்ணீர் பதாதைகள்,
பிரசுரித்தவர்களுக்கும் மலர் மாலை, மலர்
வலையங்கள் ஆக்கி பிரார்த்தித்தோருக்கும்
கண்ணீர் அஞ்சலி நிகழ்வு செய்து எமது
மனதை ஆறுதல் படுத்தியோருக்கும் இறுதி
அமரத்துவ கிரியைகளைச் செய்து உதவிய
குருக்களுக்கும் இறுதி கிரியைகள்
ஊர்வலம், அக்கினிச் சங்கம நிகழ்வுகள்
அனைத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும்
இம்மலரை அச்சிட்டு தந்த சிவா
பதிப்பகத்தாருக்கும் எமது இதய பூர்வமான
நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா பதிப்பகம் 05, கனகபுரம்.